பக்கங்கள்: 13

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 04 வள்ளுவர் ஆண்டு 2051 சித்திரை 29 செவ்வாய்க்கிழமை 12.05.2020 கதிர் 188

சிங்கள செவ்வியில் **சுமந்திரன்** கூறியவை என்ன? வார்த்தைக்கு வார்த்தை முழு விவரம்

பக்கம் 03, 05

## ஊரடங்கு சட்டம் சட்டபூர்வமானது

**நீதிமன்றம் அறிவிப்பு**

கொழும்பு, மே 12
கொரோனா தடுப்பு நடவடிக்கைக்காக பிரகடனப்பட்டிருந்த ஊரடங்குச் சட்டம் சட்டபூர்வமானது என கம்பஹா பிரதான நீதிவான் அறிவித்துள்ளார்.

பொலிஸ் பேச்சாளர் நேற்று இதனைத் தெரிவித்தார்.

கொரோனா தடுப்பு நடவடிக்கைக்காக

பக்கம் 02

## பாடசாலைகள் ஆரம்பிக்க இன்னும் ஒரு மாதம் ஆகும்

கொழும்பு, மே 12
பாடசாலைகள் மீள ஆரம்பிக்க ஒரு மாதமாகும் என்று கல்வி அமைச்சர் டலஸ் அழகப்பெரும தெரிவித்துள்ளார்.

மாத்தறை பிரதேச செயலகத்தில் இடம்பெற்ற கூட்டத்தில் இது தொடர்பாக அவர் தகவல் வெளியிட்டுள்ளார்.

சுகாதாரத் துறையினரின் அறிவுறுத்தல்களுக்கு அமைய, சிறுவர்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட்ட அன்றே பாடசாலைகள்

பக்கம் 02




இன்றைய ஸ்பெஷல்
எல்லா ஊடகங்களிலும் சுமந்திரனின் பேட்டி விவகாரம்தான். அதைத் தவிர்த்து நான் ஏதும் இன்று எழுத முடியாது. எனவே அதை ஒட்டி ஓரிரு அவதானிப்புப் பதிவுகளுடன் விடயத்தைச் சுருக்கிக்

பக்கம் 02


# சுமந்திரன் குறித்து விக்கிக்கு வெட்கமாக இருக்கின்றதாம்!



## அறிக்கை மூலம் அவர் விவரிப்பு

யாழ்ப்பாணம், மே 12
"யாழ் தமிழ் மக்களின் தோளில் ஏறி பயணம் செய்து கொண்டு பெரும்பான்மையினரின் அடிவருடி போல் வேம் ஆடுவது சகிக்க முடியாது இருக்கின்றது. எனது பழைய மாணவரா இவ்வாறு பேசுகின்றார் என்று எனக்கு வெட்கமாக இருக்கின்றது."

பக்கம் 02



## சுமந்திரன் கூறியவை சொந்தக் கருத்து அது கூட்டமைப்பின் நிலைப்பாடல்ல!

**கூறுகின்றார் இரா.சம்பந்தன்**



யாழ்ப்பாணம், மே 12
கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன், தமிழர்களின் ஆயுதப் போராட்டம் தொடர்பில் தெரிவித்துள்ள கருத்துக்கள் அவரின் சொந்தக் கருத்து – தனிப்பட்ட கருத்து. அதைக் கூட்டமைப்பின் நிலைப்பாடாகவோ அல்லது இலங்கைத் தமிழரசுக் கட்சியின் கருத்தாகவோ எடுத்துக்கொள்ளக்கூடாது.

– இவ்வாறு நேற்றிரவு காலைக்கதிரிடம்

பக்கம் 02

## அடுத்த மாதம் திறக்கப்படும் கட்டுநாயக்க

கொழும்பு, மே 12
கொரோனா அச்சுறுத்தல் காரணமாக கடந்த மார்ச் 20 ஆம் திகதி மூடக்கப்பட்ட கட்டுநாயக்க விமான நிலையத்தை அடுத்த மாதம் மீண்டும் திறப்பதற்கு அரசு முடிவெடுத்துள்ளது.

மீண்டும் விமான சேவைகளை ஆரம்பிப்பதற்கு தீர்மானித்துள்ளதாக விமான சேவைகள் அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

இது

பக்கம் 04

## பிரபாகரனின் அர்ப்பணிப்புக்கு நாங்கள் தலை சாய்க்கின்றோம்!

**உறுதிபடக் கூறுகின்றார் சுமந்திரன்**

யாழ்ப்பாணம், மே 12
தமிழ் மக்களின் அரசியல் சரித்திரத்தில் – ஒரு குறித்த கால கட்டத்தில் தமிழர் விடுதலை பெறவேண்டும் என்பதற்காக தன்னையே அர்ப்பணித்து செயலாற்றிப் போராடிய ஒருவர் பிரபாகரன். அவரது முறைமைகள் எனக்கு ஒவ்வாததாக இருந்தாலும் அவருடைய அர்ப்பணிப்பு என்னுடைய அர்ப்பணிப்பையும் வேறு பலருடைய அர்ப்பணிப்பையும் விடக் கூடுதலாகவே இருந்திருக்கின்றது. அதற்கு நாம் தலை சாய்க்கின்றோம். எங்கள் மரியாதையை நாங்கள் செலுத்துகின்றோம்.

– இவ்வாறு தெரிவித்திருக்கின்றார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ. சுமந்திரன்.

விடுதலைப் புலிகளின் ஆயுதப் போராட்டம் தவறு என்ற நிலைப்பாட்டை நான் எப்போதுமே எடுக்கவில்லை என்றும் அவர் குறிப்பிட்டார்.

பக்கம் 04

## மஹிந்த – சுமந்திரன் இன்றிரவு சந்திப்பு

**அரசியல் கைதிகள் குறித்து பேச்சு நடத்துவதற்காக**

யாழ்ப்பாணம், மே 12
தமிழ் அரசியல் கைதிகள் விடுதலை தொடர்பில் பேச்சு நடத்துவதற்காக இன்று இரவு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவைச் சந்திக்கவுள்ளார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன்.

இன்று இரவு 7.30 மணியளவில் அலரி மாளிகையில் இந்தச் சந்திப்பு இடம்பெறவுள்ளது.

கடந்த வாரம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பிரதமர் மஹிந்தவைச் சந்தித்துப் பேசியிருந்தது. இதன்போது சுமந்திரன் அரசியல் கைதிகள் விடுதலை தொடர்பில் விசேட கோரிக்கை ஒன்றை

பக்கம் 02

## அமைச்சுக்களின் செயலாளர்களாக படைத்தரப்பினர்

கொழும்பு, மே 12
ஏழு அமைச்சுக்களுக்கு புதிய செயலாளர்கள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவால் நியமிக்கப்பட்டுள்ளனர். அவர்களில் இருவர் இராணுவ அதிகாரிகள்.

வடக்கு – கிழக்கில் மகாவலித் திட்டத்தின் ஊடாக தமிழர் தாயகப் பிரதேசங்களை ஆக்கிரமித்து வரும் மகாவலி அமைச்சின் செயலாளராக மேஜர் ஜெனரல் (ஓய்வு பெற்ற) ஏ.கே.எஸ். பெரேரா

பக்கம் 02

## சுமந்திரனின் கருத்துகளை ஏற்றுக்கொள்ள முடியாது

**விமர்சிக்கின்றார் சித்தார்த்தன்**

யாழ்ப்பாணம், மே 12
ஆயுதப் போராட்டத்தைக் கொச்சைப்படுத்தும் விதமாக எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்த கருத்தை, புளொட்டின் தலைவர் தர்மலிங்கம் சித்தார்த்தன் கண்டித்துள்ளார்.

சிறு வயது முதலே கொழும்பில் வாழ்ந்து வந்தமையால் வரலாற்று ஓட்டத்தை அறியாமல் சுமந்திரன் கருத்து தெரிவித்திருக்கலாமெனவும் அவர் கூறியுள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில் –

ஆயுதப் போராட்டம் தமிழ் மக்கள் விரும்பி ஏற்றதல்ல. தவிர்க்க முடியாமல் அது தமிழ் மக்கள் மீது திணிக்கப்பட்டிருந்தது. ஆயுதப் போராட்டத்துக்கு முன்னதாக, அஹிம்சை வழியில் நீண்ட பல வருடங்களாக நடத்தப்பட்ட போராட்டங்கள் எல்லாம் ஆயுத முனையில் அடக்கப்பட்டன. வேறு வழியின்றியே – தவிர்க்க

பக்கம் 04

## இனி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கொள்கிறேன்.

சுமந்திரனின் செவ்வியை ஒட்டி அவரின் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா ஓர் அறிக்கை வெளியிட்டிருந்தார். பழைய பல்லவிகளை எல்லாம் குறிப்பிட்டிருந்த அந்த அறிக்கையில் வழமைபோல சிறைசென்ற கதை ஏதோ ஒரு வகையில் நுழைக்கப்பட்டிருந்தது. எப்போதும் அவருக்கு அந்த விடயம் தவிர்க்க முடியாத பிரபலாபிப்பு.

ஆகவே அதைக் கவனிக்காமல் விட்டுவிடலாம். ஆனால் முழு அறிக்கையுமே அவலை நினைத்துக் கொண்டு உரலை இடித்த கதையாயிற்றே என்பதுதான் ஏளனத்துக்குரியது.

சுமந்திரனின் பேட்டியைக் குத்தாமல் குத்துவது என்று எண்ணிக் கொண்டு, அதற்கு அவர் அந்த அறிக்கை மூலம் கிரீடம் சுட்டியிருப்பதுதான் அவரை அறியாமல் செய்த ஏமாளித்தனம்.

ஆயுதம் ஏந்திய இந்திய விடுதலைப் போராட்ட தியாகி பகவத் சிங், உத்தம சிங் பற்றிக் குறிப்பிட்டு அவர்களின் விடுதலைக்காக நேரு நீதிமன்றத்தில் வாதடியமை பற்றிய விவரித்த மாவையர், பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

*"ஜாலியன் வாலாபாக்கில் நடைபெற்ற மக்கள் போராட்டத்தின் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்து மக்களைக் கொன்ற ஆஷ் துரையைக் கொன்ற பகவத்சிங், உத்தம சிங் முதலானோர் கைதுசெய்யப்பட்டு கராச்சி நீதிமன்றத்திலே தூக்குத்தண்டனை வழங்க வேண்டுமென்ற வழக்கில் ஜவர்கலால் நேரு தோன்றி பகவத்சிங் முதலானோரை விடுதலை செய்ய வேண்டுமென வாதாடினார்.*

*"தூக்குத் தண்டனைக்கு எதிராக மகாத்மாகாந்தி இங்கிலாந்துவைசிராய்க்கு ஒரு கடிதம் எழுதினார். அந்தக் கடிதத்தில் மகாத்மா குறிப்பிட்டார். 'பகவத்சிங் முதலானோரின் போராட்ட வழிமுறையை நான் ஏற்றுக் கொள்ளவில்லையென்றாலும், அவர்கள் தியாகத்தை மதிக்கிறேன். அவர்களைத் தூக்கிலிட வேண்டாம்' என்று கேட்டிருந்தார். இலங்கையிலும் எங்கள் வழக்கறிஞர்களும் ஜவர்கலால் நேரு, மகாத்மா காந்தி போலவே நடந்தனர்."* – என்றார் மாவையர்.

சரி, இதைத்தானே இப்போது சுமந்திரன் கூறியிருக்கின்றார்!

*"பகவத் சிங் முதலானோரின் போராட்ட வழிமுறையை நான் ஏற்றுக் கொள்ளவில்லை என்றாலும் அவர்கள் தியாகத்தை மதிக்கின்றேன்."* – என்ற காத்தியின்வசனத்தைத்தானே புலிகள் தொடர்பில் இப்போது சுமந்திரன் குறிப்பிட்டுள்ளார்.

ஆகவே இந்த அறிக்கை மூலம் சுமந்திரனை காந்தி மட்டத்துக்குக் கொண்டு போய் மெச்ச விழைகிறாரோ மாவையர்...!

போராளிகளின் வழக்குகளில் அமிர்தலிங்கம், சிவசிதம்பரம், நீலன் திருச்செல்வம் முதலான பல வழக்கறிஞர்கள் வாதாடியிருந்தனர் என்று தமது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார் மாவையர்.

சிவசிதம்பரத்தின் இத்தகைய பல வழக்குகளைச் செய்தியாளனாகப் பக்கத்தில் இருந்து பார்த்தவன் நான். நீலன் திருச்செல்வம் இத்தகைய பல வழக்குகளில் நீதிமன்றத்தில் பிரசன்னமாகி வாதாடினாரா என்பது எனக்குத் தெரியாது. அதை அறியாதமை என் தவறாக இருக்கலாம்.

ஆனால், கட்சிக்காகவும், தனக்காகவும் முக்கிய பல வழக்குகளில் முன்னிலையாகி, கட்சியையும் தன்னையும் காபந்து பண்ணியவர் சுமந்திரன் என்ற புகழாரத்தை கடந்த பொதுத் தேர்தல் வரை பகிரங்கமாகப் பேசி வந்த மாவையர் இப்போது சுருதியை மாற்றியமைக்கு தேர்தல் போட்டி காரணமா? போன தேர் தலில் அப்படிப் பொருட்படுத்தாதவர் இந் தத் தேர்தலில் அப்படிப் பார்ப்பார் என்று நான் சந்தேகத்தமையையே அபத்தம் என்பீர்கள்.

ஆனால் மாவையரின் அந்த அறிக்கை கட்சியின் ஸ்திரத்துக்கு நல்லதல்ல என்பதுதான் என் கணிப்பு.

தனக்கு ஆளுமை எது என்பதை எடை போடத் தவறிய தலைவன் நிமிர்ந்த தாயச் சரித்திரம் இல்லை.

இதுதான் சுமந்திரன். அவரைப் பாவிப்பதும், பயன்படுத்தாமல் வெட்டி ஓடுவதும் மாவையர் தீர்மானம். It is up to his wisdom.

–மின்னல்–

## சுமந்திரன் குறித்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
– இப்படிக் கூறியிருக்கின்றார் தமிழ் மக்கள் தேசிய கூட்டணியின் தலைவரும், தமிழ் மக்கள் பேரவையின் இணைத் தலைவரும், தமிழ் மக்கள் கூட்டணியின் செயலாளர் நாயகமும், வடமாகாண முன்னாள் முதலமைச்சருமான நீதியரசர் க.வி.விக்னேஸ்வரன்.

'சுமந்திரனின் சிங்கள நேர்காணல்' என்ற தலைப்பில் தாம் நேற்று அனுப்பி வைத்த செய்திக் குறிப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்திருக்கின்றார். அதில் அவர் மேலும் தெரிவித்திருப்பவை வருமாறு:–

சிங்கள தொலைக்காட்சி ஒன்றுக்கு திரு. சுமந்திரன் அவர்கள் வழங்கியிருந்த நேர்காணலைக் கண்டேன். அதிர்ச்சி அடைந்தேன். இவ்வாறானவர்களின் இத்தகைய பேச்சுக்களினால் சிங்கள மக்கள் மத்தியில் எமது போராட்டம் தொடர்பாகவும் எமது அரசியல் செயற்பாடு தொடர்பாகவும் தவறான எண்ணங்கள் ஏற்பட வாய்ப்புக்கள் உள்ளன. அத்துடன் சிங்கள அரசாங்கங்கள் தற்போது செல்லும் பாதை சரியென்று சிங்கள மக்கள் நினைக்கவும் வாய்ப்புண்டு.

என் பழைய மாணவரான திரு.சுமந்திரன் பற்றி எந்தக் கருத்தும் கூறாது இருக்கவே நான் முயன்றேன். ஆனால் நண்பர்கள் பலரின் உந்துதலால் நான் என் கருத்துக்களை வெளியிடுகின்றேன்.

விடுதலைப் புலிகளின் அரசியல் மற்றும் ஆயுத அமைப்பை ஏற்றுக்கொள்ளவில்லை என்று திரு சுமந்திரன் கூறியுள்ளார். அப்படியென்றால் தம்பி பிரபாகரனால் உருவாக்கப்பட்ட தமிழ் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் எப்படி நாடாளுமன்ற உறுப்பினராக அவர் இதுகாறும் இருந்திருக்க முடியும்? தாய் பகை,குட்டி உறவு என்ற கதையாகவல்லவா இது இருக்கின்றது? இவ்வாறான கருத்தை உடையவர் அவர்களால் உருவாக்கப்பட்ட கூட்டமைப்பின் தேசிய பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினராக அரசியல் பிரவேசம் செய்திருக்கக் கூடாது. தனது கருத்துக்களை வெளிப்படையாக வடமாகாணத்திலோ, கிழக்கு மாகாணத்திலோ மக்களுக்குக் கூறி சுயேச்சையாக வாக்குக் கேட்டிருக்கலாம். அல்லது சிங்களக் கட்சிகள் ஊடாக வாக்குக் கேட்டிருக்கலாம். யாழ் தமிழ் மக்களின் தோளில் ஏறி பயணம் செய்து கொண்டு பெரும்பான்மையினரின் அடிவருடி போல் வேம் ஆடுவது சகிக்க முடியாது இருக்கின்றது. எனது பழைய மாணவரா இவ்வாறு பேசுகின்றார் என்று வெட்கமாக இருக்கின்றது.

தமிழ் தேசியக் கூட்டமைப்பு என்ன நோக்கத்திற்காக யாரால் உருவாக்கப்பட்டது என்பது எல்லா மக்களும் அறிந்தது. தமிழ் மக்கள் மாத்திரமின்றி சிங்கள மக்களுக்கும் இது பற்றி தெரியும். ஆனால் சுமந்திரன் போன்றவர்கள்தான் உண்மையை அறியாமல் சிறு பிள்ளைத்தனமாக நடந்து கொள்கின்றார்கள் போல் தெரிகின்றது. இதனால் எதைச் சாதிக்கப் பார்க்கின்றார்? ஜனநாயக ரீதியாக தமிழர்களின் உரிமையை வெல்ல வேண்டும் என்ற அபிலாசையில் உருவாக்கப்பட்ட தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நோக்கமே இதனால் தடம்மாற்றிக் காட்டப்படுகின்றது. இதனால் சிங்கள மக்கள் மத்தியில் உண்மை நிலைமையை மறைத்து தவறான புரிதல்களை ஏற்படுத்த சுமந்திரன் முயல்கின்றாரோ என்று எண்ண வேண்டியுள்ளது.

அத்துடன் விடுதலைப் புலிகளுக்கு முந்தையது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்கிறார். சுமந்திரனுக்கு வரலாறு தெரியவில்லையா அல்லது தெரியாதது போல் நடிக்கின்றாரா? அப்படி நடிப்பதால் நல்லவர் என்ற பெயரை சிங்களவர்கள் மத்தியில் ஒருபோதும் அவர் பெற முடியாது. அவருக்குத் தமிழ் மக்களின் உணர்வு தான் புரியவில்லை என்றால் வரலாறுமா தெரியவில்லை.?

1949இல் உருவாக்கப்பட்டது தமிழரசுக் கட்சி. தமிழ் தேசியக் கூட்டமைப்பு உருவாக்கப்பட்டது 2001இல். 2001இல் விடுதலைப் புலிகளால் உருவாக்கப்பட்ட கூட்டமைப்பில்தான் அவர் பேச்சாளராக இருக்கிறார் என்பதை அவருக்கு நினைவுபடுத்த வேண்டியுள்ளது.

சிங்களவர்கள் மத்தியில் சுமந்திரனை விட அதிக காலம் நான் வாழ்ந்திருக்கின்றேன். அத்துடன் சிங்கள மக்களை உறவாகவும் கொண்டவன் நான். அவர்களுடன் உறவாக இருப்பது வேறு. எமது உரிமைகளை அவர்களிடம் எடுத்துக் கூறுவது வேறு. சிங்களவர்கள் மத்தியில் அதிக காலம் வாழ்ந்துவிட்டுத்தான் தமிழ் மக்களின் உணர்வுகளைப் புரிந்து கொண்டு அவர்களின் உரிமைக்காக குரல் கொடுப்பதற்கு இங்கு வந்திருக்கின்றேன். சுமந்திரன் கூறியவை ஏதோ தனிப்பட்ட செல்வாக்கை சிங்களவர் மத்தியில் பெற வேண்டும் என்ற எண்ணத்தில் கூறியது போல் தெரிகின்றது. தமிழ் மக்களின் வருங்கால நலம் பற்றி சிந்திக்காதுதான் அவர் அங்கு பேசியுள்ளார்.

மற்ற இனங்களை மதிப்பது வேறு. அவர்களின் அடிமையாக வாழ விரும்புவது வேறு. மற்ற இனங்களை திருப்திப்படுத்துவதாக நினைத்துக்கொண்டு அவர்களின் அடிவருடியாகக் காட்டிக் கொள்வதை சுமந்திரன் பெருமையாக நினைக்கிறார் போல் தெரிகின்றது. இது சிங்கள மக்களுக்கு எம் தொடர்பில் தவறான தோற்றப்பாட்டையே உருவாக்கும். தமிழர்கள் அடிமையாக இருப்பதை அதிர்டமாக நினைக்கிறார்கள் என்ற தோற்றப்பாட்டை உருவாக்கும். சுமந்திரன் அவ்வாறு அடிமையாக இருப்பதை பெருமையாகக் கருதலாம். ஆனால் தமிழர்கள் சார்பில் பேசும் போது அவ்வாறு பேச அவருக்கு உரித்தில்லை.

அது மாத்திரமல்ல, அரசியல் கட்சிகளின் செயற்பாடுகள் தோல்வியை தழுவிய நிலையில், விரக்தி கொண்ட தமிழ் இளைஞர்கள் அரசுக்கு எதிராக ஆயுதம் ஏந்திப் போராடியது வரலாறு. அதனை நாம் எம் விருப்பு வெறுப்புக்களுக்காக மாற்றிச் சொல்ல முடியாது. கொழும்பில் சுகபோகமாக வாழ்ந்துவிட்டு, இப்போது வந்து வடக்கு, கிழக்கு மக்களின் உரிமைப் போராட்டத்தை கொச்சைப்படுத்தவும் பலவீனப்படுத்தவும் எவருக்கும் எந்த உரிமையும் இல்லை. வேண்டுமானால் இந்த மக்களை புரிந்து அவர்களுக்காக அவர்கள் கோரிக்கையின் பேரில் குரல் கொடுப்பது உத்தமமானது. இல்லை என்றால் விலகி இருந்து சுமந்திரன் தாம் விரும்பும் சிங்கள மக்கள் மத்தியில் போட்டியிட்டு அரசியல் பதவிகளை வகிப்பது நல்லது.

சிங்களவர்களுக்கு எமது விடுதலைப் போராட்டம் தொடர்பில் புரிதலை ஏற்படுத்த வேண்டும். தம்பி பிரபாகரன் ஏன் ஆயுதம் ஏந்தினார் என்பதை நன்கு விளங்கிக்கொண்டுள்ள சிங்கள மக்கள் பலர் உள்ளனர். தமிழர் தம் போராட்டங்களை, நியாயங்களைப் பற்றிப் பேசுகின்ற சிங்களத் தலைவர்கள் தெற்கில் இருக்கின்றார்கள். அப்படியிருக்க தமிழர் என்று அடையாளப்படுத்திக் கொண்டு, போராட்டத்தையும் அதன் ஒப்பற்ற தியாகங்களையும் இப்படி கொச்சைப் படுத்தும் தமிழின சாபக்கேடுகளை அடியோடு ஒழிக்க வேண்டும். தமிழ் மக்கள் இதில் மிகக் கடுமையான விழிப்புணர்வு கொள்ளாவிடின் தென்னிலங்கை பேரினவாதிகளைக் காட்டிலும் இத்தகைய மிதவாத நடிப்பாளர்கள் எம்மைக் குழிதோண்டிப் புதைத்துவிடுவார்கள். அதே கேள்வி சிங்களத்தில் என்னிடம் கேட்டிருந்தால் பிரபாகரனின் போராட்டம் சிங்கள அரசியல்வாதிகளால் முற்றும் முழுதுமாக உருவாக்கப்பட்டது என்று கூறியிருப்பேன்.– என்று உள்ளது.

## ஊரடங்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கடந்த மார்ச் 19ஆம் திகதி முதல் அமுல் படுத்தப்பட்டுள்ள ஊரடங்குச் சட்டம் தொடர்பில் சில மனித உரிமை அமைப்புக்கள் கேள்வியெழுப்பியிருந்தன.

எனினும், கொரொனா தடுப்பு நடவடிக்கையாக சுகாதார சேவைகள் பணிப்பாளரின் ஆலோசனைக்கமைய பிறப்பிக்கப்பட்ட ஊரடங்குச் சட்டம் சட்டபூர்வமானது என நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

## அமைச்சுகளின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
நியமிக்கப்பட்டுள்ளார்.

புதிய செயலாளர்களின் பெயர்களும் அமைச்சுக்களும் வருமாறு:–

திருமதி எஸ்.எம். மொஹம்மட் – நீதி, மனித உரிமைகள் மற்றும் சட்ட மறுசீரமைப்பு அமைச்சு

ஜே.ஜே. ரத்னசிறி – பொது நிர்வாக, உள்நாட்டு அலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு.

எஸ். ஹெட்டியாராச்சி – சுற்றுலா மற்றும் விமான சேவைகள் அமைச்சு.

எச்.கே.டீ.டபிள்யு.எம்.என்.பீ. ஹபுஹின்ன – மகளிர், சிறுவர் விவகார மற்றும் சமூக பாதுகாப்பு அமைச்சு

திருமதி ஜே.எம்.பீ. ஜயவர்த்தன – உள்ளக வர்த்தகம், உணவுப் பாதுகாப்பு மற்றும் நுகர்வோர் நலன்பேணல் அமைச்சு.

மேஜர் ஜெனரல் (ஓய்வுபெற்ற) ஏ.கே. எஸ். பெரேரா – மகாவலி, விவசாய, நீர்ப்பாசன மற்றும் கிராமிய அபிவிருத்தி அமைச்சு.

மேஜர் ஜெனரல், மருத்துவ நிபுணர் சஞ்சீவ முனசிங்க – சுகாதார மற்றும் சுதேச மருத்துவ சேவைகள் அமைச்சு.

## பாடசாலைகள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
மீண்டும் திறக்கப்படும்.

பாடசாலைகளை மீள ஆரம்பிப்பதற்கான திகதி தொடர்பான அறிவிப்பு அடுத்த வாரம் வெளியிடப்படும். மீளத் திறக்கப்படும் திகதி அறிவிக்கப்பட்ட பின்னர், அனைத்துப் பாடசாலைகளிலும் தொற்று நீக்கல் செயற்பாடுகள் இடம்பெறும்.

அதற்கு நான்கு நாட்களுக்குப் பின்னரே பாடசாலைகள் ஆரம்பமாகும்.

முதலில் சாதாரண தர, உயர்தர வகுப்பு மாணவர்களுக்கான வகுப்புகள் ஆரம்பமாகும். பாடசாலைகளை ஆரம்பிக்கும் செயற்பாடுகள் நான்கு கட்டங்களாக இடம்பெறும் – என்றார்.

## மஹிந்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
முன்வைத்திருந்தார். இதன்போது, தற்போது சிறைகளில் உள்ள அரசியல் கைதிகள் தொடர்பில் பட்டியல் ஒன்றைத் தனக்குத் தருமாறு பிரதமர் சுமந்திரனிடம் கோரினார். அதற்கு சுமந்திரனும் சம்மதம் தெரிவித்தார்.

அந்தப் பட்டியலைத் தற்போது தான் தயாரித்துள்ளார் என்றும், அதனை இன்று இரவு 7.30 மணியளவில் பிரதமரை நேரில் சந்தித்து வழங்கவுள்ளார் என்றும் சுமந்திரன் குறிப்பிட்டார்.

## சுமந்திரன் கூறியது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
தெரிவித்தார் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன்.

'நான் ஆயுதப் போராட்டம் ஒன்றை ஒருபோதும் ஏற்றுக்கொள்ளவில்லை. அதன் காரணமாகத்தான் நான் பிரபாகரன் தலைமையிலான தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆயுதப் போராட்டத்தையும் ஏற்கவில்லை' என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, இலங்கைத் தமிழரசுக் கட்சி ஆகியவற்றின் பேச்சாளருமான எம்.ஏ.சுமந்திரன் சிங்கள இணைய ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய சிங்கள செவ்வியில் கூறியிருந்தார். இதைக் கண்டித்தும் சுமந்திரனுக்கு எதிராகவும் கூட்டமைப்புக்குள்ளும் தமிழரசுக் கட்சிக்குள்ளும் கடும் எதிர்ப்புகள் கிளம்பியுள்ள நிலையில் அவை தொடர்பில் இரா.சம்பந்தனிடம் வினவியபோதே அவர் மேற்கண்டவாறு பதிலளித்தார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்–

எம்.ஏ.சுமந்திரன் சிங்கள ஊடகம் ஒன்றுக்கு வழங்கியுள்ள செவ்வியில் தமிழர்களின் ஆயுதப் போராட்டம் தொடர்பில் தெரிவித்துள்ள கருத்துக்களை நான் இன்னமும் முழுமையாகப் பார்க்கவில்லை. எனினும், அவரின் தனிப்பட்ட செவ்வியை – அவரின் சொந்தக் கருத்துக்களை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நிலைப்பாடாகவோ அல்லது இலங்கைத் தமிழரசுக் கட்சியின் கருத்தாகவோ எவரும் எடுத்துக்கொள்ளக்கூடாது என்றார்.

# ஆயுதப் போராட்டத்தை கொச்சைப்படுத்தினாரா சுமந்திரன்?

**சமுதித்த:** இன்றைய அரசியல் களத்தில் சர்ச்சைக் குரிய ஒரு முக்கிய புள்ளியாக இருக்கும் ஒருவரை தேடி வந்திருக்கிறோம். அவர் யாழ்ப்பாண நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினரும் ஜனாதிபதி சட்டத்தரணியு மான எம்.ஏ.சுமந்திரன் அவர்கள். வணக்கம்.

**சுமந்திரன்:** வணக்கம்

**சமுதித்த:** தமிழ் தேசியக் கூட்டமைப்பை உருவாக்க முக்கிய காரணம் என்ன?

**சுமந்திரன்:** உண்மையான காரணம்தான் இலங் கையில் வாழும் தமிழர்களுக்கு சுதந்திரம் கிடைத்த நாளிலிருந்து நியாயமான உரிமை கிடைக்கவில்லை எனும் எண்ணம் உள்ளது. அதை சரி செய்வதற்காக 1949 இல் தமிழரசுக் கட்சி உருவானது. அதன் பின்னர் அதுவே வெவ்வேறு பெயர்களில் மாறி வந்து இப்போது தமிழர் தேசிய கூட்டமைப்பு என ஆகியுள்ளது.

**சமுதித்த:** தமிழ் தேசிய கூட்டமைப்பு என்பது விடுதலைப் புலிகளின் அரசியல் பகுதியா?

**சுமந்திரன்:** இல்லை. விடுதலைப் புலிகள் உரு வானது 1970களில்.

எங்கள் கட்சி உருவானது 1949 இல்.

**சமுதித்த:** தமிழ் தேசிய கூட்டமைப்பின் முதலாவது கூட்டத்தைக் கூட்டியவர் வேலுப்பிள்ளை பிரபாகரன்.

**சுமந்திரன்:** இல்லை.

**சமுதித்த:** பிரபாகரன்தான் தமிழ் தேசியக் கூட்ட மைப்பை உருவாக்குகிறார். அதில் சம்பந்தன் அவர்கள் கலந்து கொள்கிறார்கள்.

**சுமந்திரன்:** இல்லை.

**சமுதித்த:** நீங்கள் சொல்ல வருவது விடுதலைப் புலிகளின் தேவைகளுக்காக தமிழ் தேசியக்கூட்டமைப்பு உருவாகவில்லை என்றா?

**சுமந்திரன்:** அப்படி உருவானதாக சொல்ல முடியாது. 2001 ஆம் ஆண்டு தமிழ் தேசியக்கூட்டமைப்பு உரு வானபோது போர் நிறுத்தம் ஒன்று இருந்தது. அந்தக் காலத்தில் தான் தமிழ் தேசியக் கூட்டமைப்பு உருவானது. அப்போது விடுதலைப் புலிகளோடு தொடர்பு இருந் தது. அரசும் அப்போது விடுதலைப் புலிகளோடு பேசிக் கொண்டிருந்த காலமாக அது இருந்தது.

**சமுதித்த:** தமிழ் தேசிய கூட்டமைப்பு உருவான





போது 7 கட்சிகள் இருந்தன. இப்போது இருப்பது மூன்று மட்டுமே. புளொட் – டெலோ மற்றும் தமிழரசுக் கட்சி மட்டுமே இப்போது இருக்கிறார்கள்.

**சுமந்திரன்:** இப்போது மூன்று கட்சிகள் இருந்தா லும் ஆரம்பத்தில் நான்கு கட்சிகள் இருந்தன. அந்த நான்கு கட்சிகளில் ஒன்றாகதான் இப்போது தமிழ் தேசிய கூட்டமைப்பு இருக்கிறது. காலத்திற்குக் காலம் சில கட்சிகள் உள்ளே வருகின்றன. சிலகட்சிகள் வெளியே போகின்றன.

## சிங்களச் செவ்வியில் அவர் கூறியவை என்ன?

**சமுதித்த:** ஆனந்தசங்கரி அவர்களும் இந்த கட்சியில் இருந் தார்கள். பாசிசவாதிகளோடு என் னால் தொடர்ந்து இருக்க முடியாது என்றே அவர் வெளியே சென்றார்.

**சுமந்திரன்:** ஆனந்தசங்கரி அவர்கள் இருந்தது தமிழர் விடுத லைக் கூட்டணியில். அந்தக் கட்சி தான் தமிழ் தேசிய கூட்டமைக்குள் இருந்தது. தமிழரசு கட்சி அப்போது இருக்கவில்லை . ஆனந்த சங்கரி அவர்கள் தமிழர் விடுதலைக் கூட்டணியோடு ஒரு வழக்கை தொடுத்து செயல்பட்ட போதுதான் தமிழர் விடுதலைக் கூட்டணி யையும் அவரையும் வெளியேற்றப்பட்டு தமிழரசுக் கட்சி உள்ளே வந்தது

**சமுதித்த:** விக்னேஸ்வரன் அவர்கள் வெளியேறி இருக்கிறார்கள். அனந்தி சசிதரன் அவர்கள் வெளி யேறி இருக்கிறார்கள். அப்படி வெளியேறிய அனை வரும் உங்கள் மேல்தான் குற்றம் சுமத்துகிறார்கள்.

**சுமந்திரன்:** ஆம்! இரு சாராரும் என் மேல் குற்றம் சுமத்துகிறார்கள். இனவாதிகளாக தன்னை காட்டிக் கொள்ளும் விக்னேஸ்வரன் அவர்களும், அனந்தி சசிதரன் அவர்களும் என் மேல் குற்றம் சுமத்துகிறார் கள். அதேபோல தேசிய நீரோட்டத்தில் இருக்க வேண்டு மெனும் டக்ளஸ் தேவானந்தா போன்றவர்களும் என் மேல் குற்றம் சுமத்துகிறார்கள்

**சமுதித்த:** அவர்கள் , உங்கள் கட்சியை ஐக்கிய தேசியக் கட்சியின் வாலில் தொங்க வைக்க முயற்சிக் கிறீர்கள் என்று சொல்கிறார்கள்.

**சுமந்திரன்:** அப்படி எதுவும் இல்லை. 2015 இல் நாங்கள்தான் ஐக்கிய தேசியக் கட்சியின் ரணில் விக்ர மசிங்க அவர்களுக்கு ஜனாதிபதி தேர்தலில் நிற்க வேண்டாம் என்று சொல்லி, சுதந்திரக்கட்சியின் பொதுச் செயலாளரான மைத்திரிபால சிறிசேனவைக் கொண்டு வந்து ஜனாதிபதி தேர்தலில் நிற்க நிற்க வைக்க உதவி னோம். அது ஐக்கிய தேசிய கட்சிக்கு நாம் கொடுத்த ஆதரவாக ஒருபோதும் கருதமுடியாது.

**சமுதித்த:** சரியாக சொல்லுங்கள் தமிழ் தேசிய கூட்டமைப்பின் உண்மையான தலைவர் எம் ஏ சுமந்திரனா? அல்லது சம்பந்தனா?

**சுமந்திரன்:** சம்பந்தன்தான்.

**சமுதித்த:** அது வெளியில் தெரியும் பார்வை. உண் மையான தலைவர் யார்?

**சுமந்திரன்:** உண்மையான தலைவரும் சம்பந்தன் அவர்கள்தான்.

**சமுதித்த:** தமிழ்தேசியக்கூட்டமைப்பை செயல்படுத்து வது சுமந்திரன்தான் என்று நான் நேரடியாக சொன் னால்......!

**சுமந்திரன்:** இல்லை அதை நான் ஏற்றுக் கொள்ள மாட்டேன். அதை மறுதலிக்கிறேன். எனது செல்வாக்கு அதற்குள் இருக்கிறது . அதை நான் கொடுக்கும் அழுத்தம் என்று சொல்ல முடியாது

**சமுதித்த:** அதாவது நீங்கள் தலைமைக்கு அழுத்தங்களை கொடுக்கிறீர்கள்?

**சுமந்திரன்:** சம்பந்தன் அவர்கள் எல்லா விடயத்தி லும் என்னிடம் ஆலோசனை பெற்றுத்தான் சில வேலை களை செய்கிறார்.

**சமுதித்த:** நீங்கள் உத்தியோகபூர்வமற்ற தலைவர் என்கிறேன்.

**சுமந்திரன்:** அப்படி இல்லை . நான் சொல்லும் அனைத்து ஆலோசனைகளையும் அவர் ஏற்பது இல்லை. அவர்தான் இறுதி முடிவை எடுக்கிறார்.

**சமுதித்த:** அப்போதிருந்த இந்தத் தலைவர்கள் அனைவரும் விடுதலைப் புலிகளுக்கு பயந்து இருந்தார்கள். பிரபாகரனுக்கு பயந்து இருந்தார்கள். அதனால்தானே விடுதலைப் புலிகளுக்காக இந்த அரசியல் கட்சிகள் செயல்பட்டன.

**சுமந்திரன்:** அப்படி சொல்ல முடியாது. 2001லிருந்து 2004 வரையிலான காலப் பகுதியில் விடுதலைப் புலிகளோடு இணைந்து செயல்பட்டார்கள். அந்த நேரம் இலங்கை அரசும் விடுதலைப் புலிகளோடு பேசிக் கொண்டிருந்த காலமாக அது இருந்தது.

**சமுதித்த:** எம்.ஏ.சுமந்திரன் இனவாதியா?

**சுமந்திரன்:** இல்லை! இனவாதி இல்லை.

**சமுதித்த:** நீங்கள் சிங்கள,தமிழ்,முஸ்லிம் இனக்கு ழுக்கள் ஒன்றாக வாழவேண்டும் என்று விரும்புகிறீர்களா?

**சுமந்திரன்:** ஆம்! அப்படியாக அனைவரும் ஒன்றாக வாழ வேண்டும் எனும் கடும் நிலைப்பாட்டில் தான் இருக்கிறேன்.

**சமுதித்த:** உங்களுடைய சில கருத்துக்களை பார்க்கும்போது நீங்கள் ஓர் இனவாத கருத்தியல்வாதி போல எங்களுக்கு தெரிகிறது.

**சுமந்திரன்:** அப்படியான எந்த ஓர் அறிக்கையும் உங்களால் காண்பிக்க முடியாது.

**சமுதித்த:** உங்களுடைய உண்மையான அரசியல் தலைவர் யார்?

**சுமந்திரன்:** இன்றைக்கு என்னுடைய அரசியல் தலைவர் சம்பந்தன் அவர்கள்.

**சமுதித்த:** நீங்கள் 2010இல் ஒரு வழக்கறிஞராக அரசியலுக்குள் தேசியப்பட்டியலின் ஊடாக பிரவேசிக் கிறீர்கள். நீங்கள் சிறையில் அடைக்கப்பட்டிருந்த புலி களுக்காக வாதாடி, காணாமல் போனவர்களுக்காக வாதாடி, இப்படி புலிகள் சார்பான ஓர் ஈர்ப்பை எடுத்துக் கொண்டுதான் நீங்கள் அரசியலுக்குள் வருகிறீர்கள்.

**சுமந்திரன்:** அது விடுதலைப் புலிகளுக்காக என்று யாரும் சொல்ல முடியாது. நான் சிவில் வழக்குகளை வழக்காடும் ஒரு வழக்கறிஞர். அதனால் நான் கிரிமி னல் வழக்குகளை வாதாடவில்லை. ஒன்றிரண்டு வழக் குகளில் வாதாடி இருக்கிறேன். 90களில் நான் இந்த தொழிலில் ஈடுபட்டேன். அந்தக் காலத்தில் நான் பயங் கரவாத வழக்குகளுக்காக, ஜே.வி.பி. தொடர்பாக வழக் காடியுள்ளேன். அதனால் விடுதலைப் புலிகளுக்காக நான் வழக்காடி நின்றதாக யாரும் சொல்ல முடியாது.

**சமுதித்த:** 2015இல் 58,000 வாக்குகளை பெறு கிறீர்கள் . அதாவது நீங்கள் ஒரு பிரபல்யமான ஒரு ம னிதர் . ஜே.வி.பிக்காக மட்டும் வாதாடி நீங்கள் 58,000 வாக்குகளை யாழ்ப்பாணத்தில் பெற முடியாதுதானே?

**சுமந்திரன்:** பெறமுடியும் . அந்தக் காலத்தில் நான் ஜே.வி.பியுடன் இணைந்து யாழ்ப்பாணத்தில் சிவப்புச் சட்டை அணிந்து மேதின ஊர்வலத்தில் கலந்து கொண் டேன். எங்கள் மக்கள் அப்படிப் பார்ப்பவர்கள் அல்லர்.

**சமுதித்த:** உங்களுடைய ஐடியோலஜி அதாவது அரசியல் இருப்பு ஜே.வி.பி. உடனா? அப்படியானால் நீங்கள் தவறான இடத்தில் இருக்கிறீர்கள்?

**சுமந்திரன்:** ஜே.வி.பியோடு கருத்தியலாக அல்ல. அப்போதைய அரசுக்கு எதிராக ஜனநாயகப் போராட் டமொன்றை நடத்தினோம். அதில் ஜே.வி.பியும் இணைந்தனர். அதுவும் எம்மோடு கைகோர்த்து செயல்பட்ட ஓர்அமைப்பு.

**சமுதித்த:** அப்படியானால் அனுரகுமார திசாநாயக்க தானே உங்கள் அரசியல் தலைவராக முடியும்?

**சுமந்திரன்:** அப்படி ஒன்றும் இல்லை . நான் எல்லா கட்சிகளுடன் இணைந்து வேலை செய்ய விருப்பமாக இருக்கும் ஒருவன்.

**சமுதித்த:** யாழ்ப்பாண மக்கள் சொல்கிறார்கள் வாக்குகளைப் பெற்றதற்கு பிறகு சுமந்திரன் அந்தப் பக்கமே வரவில்லை என்கிறார்கள்?

**சுமந்திரன்:** அப்படி யாரும் சொல்லவில்லை.

**சமுதித்த:** சுமந்திரன் இப்போது எங்கே அரசியல் கைதிகளை பற்றிப் பேசுகிறார் ?காணிகளை பற்றி பேசுகிறார்? காணாமல் போனவர்களை பற்றி பேசுகிறார்? தேர்தல் குறித்தும் அவசரகாலச் சட்டம் குறித்தும் பேசிக் கொண்டிருக்கிறார்.

**சுமந்திரன்:** இவை குறித்து பேசியது நான் என்று அவர்களுக்குத் தெரியும். அதேபோல பல அரசியல் கைதிகள் வெளியே வரவும் நான் வேலை செய்திருக்கி றேன். காணிகளை விடுவிக்கவும் நான் வேலை செய்தி ருக்கிறேன். அவை அவர்களுக்கு தெரியும்.

**சமுதித்த:** இன்னும் விடுவிக்க வேண்டிய அரசியல் கைதிகள் இருக்கிறார்களா?

**சுமந்திரன்:** ஆம் 70 பேர் அளவு இருக்கிறார்கள்.

சுமந்திரன் - சமுதித்த சர்ச்சைக்குரிய பேட்டியின் முழு விபரம்
தமிழாக்கம் : ஜீவன்

(09 ஆம் பக்கம் பார்க்க..)

நமது பார்வை
உண்மை – நேர்மை – பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி – 021 222 3000,
மின்னஞ்சல் – kalaikkathirnews@gmail.com
இணையம் – onlinekathir.com

# அரசியல் ஏமாளி சுமந்திரன்

**இன்றைய தமிழ் அரசியலில் பரிதாபத்துக்குரிய நபர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் – அல்லது தமிழரசுக் கட்சியின் – பேச்சாளர் சுமந்திரன்தான். போகிற போக்கில் அதுவும் கூட – 'பேச்சாளர் பதவியும்' கூட – இப்போது அவருக்கு இருக்கும் 'முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்' என்ற பட்டம் போல 'முன்னாள் பேச்சாளர்' என்று ஆகிவிடுமோ, என்னவோ? அப்படித்தான் இருக்கின்றது நிலைமை.**

**அரசியலில் வெளிப்படையாகப் பேசி, அதற்காக வாங்கிக் கட்டும் நபராக அவர் தென்படுகின்றார்.**

**அரசியலுக்கு முதலில் தேவை நடிப்பு. நடிக்கத் தெரியாமல் – பாவனை பண்ண அறியாமல் – மனதில் பட்டதை வெளிப்படையாகப் பேசி, அதற்காகக் கழுத்துக் குதறப்படும் நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கின்றார் அவர்.**

**புளொட் தலைவர் சித்தார்த்தன் கூறியமை போல சிறுவயது முதல் கொழும்பில் வாழ்ந்து வந்தமையால் வரலாற்று ஒட்டத்தை அறியாமல் சுமந்திரன் அப்படிக் கருத்துக் கூறினார் என்றே வைத்துக் கொள்வோம்.**

**சரி, அறியாமல்தான் அப்படி சுமந்திரன் என்ன கூறியிருக்கின்றார்?**

**அவரது அரசியல் எதிரிகளான நீதியரசர் விக்னேஸ்வரன், சுரேஷ் பிறேமச்சந்திரன், கஜேந்திரகுமார் பொன்னம்பலம் முதற்கொண்டு, பங்காளிக் கட்சிகளின் தலைவர்களான செல்வம் அடைக்கலநாதன், சித்தார்த்தன் ஆகியோரால் மட்டுமல்லாமல், அவரது கட்சியைச் சேர்ந்த சார்ள்ஸ் நிமலநாதன், சரவணபவன், அரியநேத்திரன் போன்றவர்களுடன் கடைசியாக கட்சித் தலைவர் மாவை சேனாதிராஜா, கட்சியின் மூத்த தலைவர் இரா.சம்பந்தன் வரையிலும் எல்லோராலுமே இந்த விடயத்தில் 'தீண்டத்தகாதவராக' நோக்கப்படும் நிலைமைக்கு சுமந்திரன் தள்ளப்பட்டிருக்கின்றாரா?**

**சுமந்திரனின் சிங்களச் செவ்வி இவர்களில் சிலருக்கு குருடன் யானை பார்த்த கதை போன்றது என்றே தோன்றுகின்றது.**

**ஆயுதப் போராட்டத்தோடு பயணித்து வந்தவர்களின் கதை வேறுமாதிரியானது.**

**நீதியரசர் விக்னேஸ்வரன் அரச நீதித்துறைப் பதவியோடு பாதுகாப்பாக இருந்து கொண்டு தூரத்திலிருந்தபடி போராட்டத்தை நோட்டமிட்டவர். அதனால்தான் இன்று வரை அவருக்கு பிரபாகரன் 'தம்பி பிரபாகரன்' ஆகத் தெரிகிறார். இதுவரை ஒரு நாளுமே அவருக்குப் பிரபாகரன் 'தலைவர் பிரபாகரன்' ஆகத் தெரியவேயில்லை.**

**மாவை சேனாதிராஜா அந்தப் போராட்டத்துக்கான ஆரம்பத்தில் மண்வெட்டிபோட்டு கொத்தி, வயலைப் பண்படுத்திக், போராட்டக் களத்தை வளப்படுத்திய பிதாமகர்களுள் ஒருவர். அதற்காக வருடக்கணக்கில் சிறைவாசமும் அனுபவித்தவர். ஏதோ காரணங்களினால் நேரடி ஆயுதப் போராட்டத்திலிருந்து சற்றுத் தள்ளி நிற்க வேண்டியவரானார். ஆனாலும் உணர்வும் உயிருமாகப் போராட்டத்துடன் நின்றவர். அதற்காகத் தலைவர் பிரபாகரனால் மெச்சப்பட்டவர்.**

**கஜேந்திரகுமார் போன்றோர் ஆயுதம் தூக்காவிட்டாலும் அந்தப் போராளிகளுக்கு நிகரான நிலைப்பாட்டில் நின்றவர்கள்; இன்னும் நிற்கின்றவர்கள்.**

**வேறு சிலர் – பெயர் குறிப்பிட விரும்பவில்லை – யாருடைய போராட்டத் தியாகத்திலும் பாடுகளிலும் தமது அரசியலை விடுதலைப் போராட்டத்தின் பெயரால் வியாபார அரசியலாக்கிக் கொண்டு தொடர்பவர்கள்.**

**இன்னும் இரு தரப்பினர் உள்ளனர். ஒரு தரப்பினர் சுரேஷ் பிறேமச்சந்திரன், செல்வம் போன்றோர். மற்றவர்கள் சித்தார்த்தனின் புளொட் அணி சார்ந்தோர். இந்தத் தரப்பினர் எல்லோருமே ஆயுதப் போராட்டத்தை வரித்தவர்கள்தாம். தலைவர் பிரபாகரனுடன் சேர்ந்து ஆயுதம் தூக்கியவர்கள்தாம்.**

**இந்தியப் படையின் வருகையுடன் ஆயுதங்களைக் கைவிட்டனர் என்று கூறினார்கள். அதன் பின்னர், அதுவரை காலமும் நடந்தவற்றுக்குப் பிராயச்சித்தம் செய்யும் தரப்பில் இணைந்து முழுமையாகப் புலிகளின் ஆயுதப் போராட்டத்துக்குப் பின்புலமான அரசியல் சக்தியாகினர் – சுரேஷ், செல்வம் தரப்பினர். இன்னும் அந்நிலை நீடிக்கின்றது எனலாம்.**

**அடுத்தது – புளொட். 2009 முள்ளிவாய்க்கால் பேரவலம் வரையிலும், ஏன் அதற்குப் பின்னர் 2010 ஜனாதிபதித் தேர்தல் கடந்தும், தமிழினத்துக்குப் பேரழிவை ஏற்படுத்திய மஹிந்த – கோட்டா தரப்புடன் நின்றவர்கள். புலிகளுடன் இணைந்துதான் அதைச் செய்தோம் என்பது அவர்களின் இப்போதைய வாதம்.**

**இவர்கள் எல்லோரும் ஏறி நின்று 'கழுத்துக்குதறும்' நிலைக்கு சுமந்திரன் சென்றமைக்கு அவர் என்ன தவறு செய்திருக்கின்றார் என்று தேடிப் பார்த்தோம்.**

***"நான் ஆயுதம் தூக்கிப் போராடுவதை வரவேற்பவன் அல்லன். அதனால் ஆயுதப் போராட்டத்தை ஏற்று அங்கீகரிக்கவில்லை"* – இதுதான் அவர் கூறிய விடயங்கள்.**

**இப்படிக் கூறுவது ஆயுதப் போராட்டத்துக்கு எதிரானதா? ஆயுதப் போராட்டத்தை கொச்சைப்படுத்துவதா?**

**பிரபாகரன் களத்தில் இருக்கும் வரை புலிகளுக்கு எதிராக ஆயுதம் தூக்கி அவர்களை அழித்தவர்களை எல்லாம் இன்னும் பெரும் வீரர்களாகப் பேற்றும் தமிழினத்துக்கு அந்த வகையறாக்களுக்குள் அடங்காத – அவர்களைப் போல அரசியல் அரிதாரம் பூசி நடிப்பு பண்ணாத – புலிகளின் ஆயுதப் போராட்டத்தை தனது வாக்கு வங்கிக்கான அரசியல் பிரசார உத்திக்குரிய மூலதனமாகப் பயன்படுத்த தெரியாத – சுமந்திரன் உண்மையில் அரசியல் ஏமாளிதான்!**

## பிரபாகரனின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சமூக ஊடகம் ஒன்றில் நேற்றிரவு இடம்பெற்ற அரசியல் கலந்துரையாடலில் பங்கேற்று கருத்து வெளியிடும்போதே அவர் இப்படிக் கூறினார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில் –

புலிகள் செய்த ஆயுதப் போராட்டம் தவறு என்று நான் எப்போதுமே சொன்னதில்லை. இது குறித்து பல தடவைகள் பல விளக்கங்களை நான் சொல்லியுள்ளேன். அந்த விளக்கங்கள் எல்லாம் ஒரேவிதமான விளக்கங்கள்தான்.

அன்றைய நேரத்தில் அரச பயங்கரவாதத்துக்கு எதிராக அவர்கள் எடுத்த முடிவை இன்றைக்கு நாங்கள் விமர்சிக்க முடியாது.

நான் முன்னர் தெளிவாகச் சொல்லியுள்ளேன். புலிகளின் தியாகங்களை எவரும் கொச்சைப்படுத்தக்கூடாது – கொச்சைப்படுத்த முடியாது என்று. ஏனென்றால் அவர்கள் தங்கள் உயிரைத் தியாகம் செய்திருக்கின்றார்கள். தங்களுக்காக அல்ல. எங்களுக்காக. அவர்களின் வழிமுறை என்னுடைய வழிமுறையாக இல்லாவிட்டாலும் அவர்களின் தியாகங்கள் போற்றப்படவேண்டும் என்பது எனது உறுதியான நிலைப்பாடு. அந்தத் தியாகங்களை வாக்குச் சேகரிப்பதற்காக நான் பயன்படுத்தவேமாட்டேன்.

இம்முறை தேர்தலில் நான் நிச்சயமாக வெற்றி பெறுவேன். அதில் எந்தவிதமான சந்தேகமும் கிடையாது.

கூட்டமைப்பின் தலைமையுடன் மோதல் போக்கு ஏற்படும் வாய்ப்பு இருப்பதாக எனக்கு தெரியவில்லை. நான் சொன்ன கருத்து குறித்து என்னிடம் விளக்கம் கோருவதற்குக் கூட நியாயமில்லை. கேட்டால் நான் விளக்கத்தைக் கொடுப்பேன். இதுவரை எவரும் விளக்கம் கேட்கவில்லை.

கட்சியின் பொதுச் செயலர் துரைராஜசிங்கம் என்னுடன் தொடர்பு கொண்டு என்ன நடந்தது என வினவினார். நான் நேர்காணலில் உள்ள விடயங்களைச் சொன்னேன். 21நிமிட நேர்காணலில் – சிங்கள மொழியில் நடந்த அந்த நேர்காணலை சரியாக – முழுமையாக விளங்கிக்கொண்டு – அதன் பின்னணியையும் கேள்விகளுக்குப் பின்னால் உள்ள சங்கதிகளையும் விளங்கி அதனை உள்வாங்கி அவர்கள் இந்த அறிக்கைகளை விடுகிறார்களா என்பது எனக்குச் சந்தேகம்.

செல்வம் அடைக்கலநாதன் பகிரங்கமாக அறிக்கை விட்டிருக்கிறார். நான் இப்படிச் சொன்னது மன்னிக்கமுடியாத குற்றம் என்று சொல்லி உள்ளார். நான் அஹிம்சைவாதி. எனக்கு ஆயுதத்திலும் வன்முறையிலும் நம்பிக்கை இல்லை என்று சொல்வது எப்படி மன்னிக்கமுடியாத குற்றம் என்று எனக்கு விளங்கவில்லை.

இந்தத் தீவில் தமிழ்த் தேசம் ஒன்று இருக்கின்றது. அதனை இல்லாமல் பண்ணிவிட முடியாது.

பிரதமர் மஹிந்தவைச் சந்திப்பதற்கு நாங்கள் ஒன்றாகப் பேசித்தான் தீர்மானம் எடுத்தோம். நாங்கள் அதில் பங்கேற்றமைக்குக் காரணம், வடக்கு கிழக்கு மக்களின் பிரச்சினைகளை இங்கே எடுத்துச் சொல்வதற்கு சந்தர்ப்பங்கள் குறைவாக இருந்தன. கூட்டறிக்கையிலே நாடாளுமன்றம் கூட்டப்படவேண்டும் என நாங்கள் சொல்லி இருந்தாலும் இந்தச் சந்தர்ப்பத்திலே அரசுக்கு நாங்கள் ஆதரவு கொடுப்போம் என்பதையும் திடமாகச் சொல்லியிருக்கிறோம். ஆகவே இது நாடாளுமன்றம் அல்ல. நாடாளுமன்றத்துக்கான மாற்றீடும் அல்ல. நாடாளுமன்றம் கூட்டப்படவேண்டும். அதிலே செய்யப்படவேண்டிய விடயங்கள் அங்கேதான் செய்யப்பட முடியும். இங்கே செய்யப்பட முடியாது என்பதை எங்கள் அறிக்கையிலே தெளிவாகச் சொல்லி – இந்த கொரோனா விடயத்தில் நாங்கள் ஆதரவைக் கொடுக்கத் தயார் என்று கூறியிருந்தோம். எங்கள் மக்களின் பிரச்சினைகளையும் சொல்வதற்குத் தயாராக இருக்கிறோம் என்று அவர்களிடம் கூறினோம்.

யார் ஆட்சிக்கு வந்தாலும் ஆட்சியில் இருப்பவர்களுடந்தான் பேசவேண்டும். ஆகவே மஹிந்த ராஜபக்ஷ தரப்பு ஆட்சிக்கு வந்தாலும் அவர்களுடன் பேச நாங்கள் தயாராக இருக்கின்றோம் – என்றார்.

## சுமந்திரனின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முடியாத வரலாற்று ஓட்டமாகவே ஆயுதப் போராட்டம் உருவானது.

ஆயுதப் போராட்டம் ஆரம்பிக்கப்பட்ட காலகட்டத்தில், அது காலத்தின் கட்டாயமாகவே பெரும்பாலான தமிழ் மக்களால் உணரப்பட்டது.

ஆயுதப் போராட்டம் பிரபாகரனால் உருவாக்கப்பட்டதல்ல. மாணவர் பேரவை, தமிழ் இளைஞர் பேரவை போன்றன ஆயுதப் போராட்டத்துக்கு கருவூட்டின. பொன்.சிவகுமாரன் முதலில் அதற்குச் செயல் வடிவம் கொடுத்தார். பின்னர் பல போராட்ட இயக்கங்கள் ஆயுதப் போராட்டத்தை முன்னெடுத்தன. பிரபாகரன் அந்த போராட்டத்தைக் கூர்மைப்படுத்தினார்.

சுமந்திரன் தனது பேட்டியில், சிறுவயது முதலே கொழும்பில் வசிப்பதாகத் தெரிவித்துள்ளார். இந்தச் சூழலால் அவர் இந்த அரசியல் போக்கை அறியாமல் விட்டிருந்திருக்கலாம்.

ஆயுதப் போராட்டத்தின் ஆரம்பகால கட்டத்தில் போராளிகள் சிறைகளில் சிக்கிய போது, தமிழ்த் தேசிய அரசியல் கட்சிகளின் தலைவர்கள் அமிர்தலிங்கம், சிவசிதம்பரம் போன்ற பலர், அவர்களிற்காக நீதிமன்றங்களில் முன்னிலையாகினர். அவர்களின் குடும்பங்களின் சுக துக்கங்களை கவனித்துக் கொண்டார்கள். தமிழ் தலைவர்கள் முன்னெடுத்த அஹிம்சை வழி போராட்டம் பலனற்றதாக மாறி, ஒரு அரசியல் பரிணாமாகவே ஆயுத வழிப் போராட்டம் உருவானது.

ஆயுதப் போராட்டத்தின் ஆரம்பகாலத்திலிருந்து அந்த வரலாற்று ஓட்டத்தில் பய ணிப்பவன் என்ற ரீதியில், சுமந்திரனின் கருத்து தவறானது. அவருடைய கருத்தை தமிழர்கள் எவருமே ஏற்றுக் கொள்ளமாட்டார்கள் என்பதே எனது கருத்து – என்றார்.

## அடுத்த மாதம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தொடர்பில் கருத்து வெளியிட்டுள்ள அவர்,

விமான நிலையங்கள் மூடப்பட்டுள்ளமையினால், நாட்டுக்குக் கிடைக்கவிருந்த மிகப் பெரிய வருமானம் இல்லாது போயுள்ளது. குறிப்பாக சுற்றுலாத்துறை பாதிக்கப்பட்டுள்ள காரணத்தால் பொருளாதார ரீதியில் பாரிய பாதிப்புகளை எதிர்கொள்ள நேர்ந்துள்ளது.

எனினும் தற்போது நாட்டை மீண்டும் வழமைக்கு கொண்டுவருவதற்கான தீர்மானங்கள் அரசால் முன்வைக்கப்பட்டுள்ளன.

பொருளாதார காரணிகளைக் கருத்திற் கொண்டே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. அதற்கமைய விமான சேவைகளையும் வழமைக்குக் கொண்டுவர வேண்டும் என்ற காரணிகளை நாம் முன்வைத்துள்ளோம்.

மீண்டும் விமான சேவைகளை முன்னெடுப்பது குறித்து அரசு சுகாதார அதிகாரிகளுடன் பேசி ஒரு தீர்மானம் எடுக்கவுள்ளது.

எவ்வாறு இருப்பினும் எதிர்வரும் ஜூன் மாதம் தொடக்கம் இலங்கைக்கான விமான சேவைகள் வழமைக்குக் கொண்டு வரப்படும் என்ற நம்பிக்கை உள்ளது.

அதற்கமைய இப்போதிருந்து விமான நிலையங்களின் பராமரிப்பு மற்றும் பயணிகளை கண்காணிக்கும் மருத்துவ இயந்திரங்களை பொருத்துவது குறித்து நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

இலங்கைக்கு வரும் வெளிநாட்டுப் பயணிகள் மற்றும் இலங்கைப் பயணிகள் அதேபோல் இலங்கையில் இருந்து வெளிநாடுகளுக்குச் செல்லும் பயணிகள் எனச் சகலருக்கும் மருத்துவ பரிசோதனைகளை முன்னெடுப்பது குறித்தும் விமானப் பயணங்களில் சில மாற்று நேர அட்டவணைகளைக் கையாளவும் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது – என்றார்.

# ஆயுதப் போராட்டத்தை....

(3 ஆம் பக்கத் தொடர்ச்சி..)

**சமுதித்த:** காணி விடுவிப்பு குறித்து மகிழ்ச்சி அடைகிறீர்களா?

**சுமந்திரன்:** மகிழ்ச்சி அடையவில்லை. ஆனால் 80 வீதமான காணிகள் விடுவிக்கப்பட்டு இருக்கின்றன.

**சமுதித்த:** காணாமல் போனோர் தொடர்பாக....

**சுமந்திரன்:** அது குறித்து எதுவுமே நடைபெறவில்லை. ஓ. எம்.பி என ஓர் அமைப்பு நிறுவப்பட்டது. அது சரியாகச் செயல்படவில்லை.

**சமுதித்த:** ஏன் நீங்கள் இலங்கையில் உள்ள அத்தனை பிரச்சினைகளையும் தூக்கிக் கொண்டுபோய் வெளிநாடுகளில் இலங்கைக்கு எதிராக கோள் மூட்டுகிறீர்கள்?

**சுமந்திரன்:** இலங்கைக்கு எதிராக அல்ல. இலங்கை சரியான நாடாக இருந்தால் அதை மறைத்து ஒழித்துக் கொண்டு செய்ய முடியாது. வெளிப்படையாக அவை செய்யப்படவேண்டும். அப்படி இல்லாமல் நாடு முன்னாள் நகர முடியாது.

**சமுதித்த:** புலிகளின் டயஸ்போராவோடு சுமந்திரனுக்கு தானே அதிக நெருக்கம் இருக்கிறது?

**சுமந்திரன்:** புலிகளின் டயஸ்போராவுக்கும் எனக்கு எந்த தொடர்பும் இல்லை.

**சமுதித்த:** உருத்திரகுமாரனோடு உங்களுக்கு இருக்கும் தொடர்பு என்ன?

**சுமந்திரன்:** அப்படி ஒன்றும் இல்லை.

**சமுதித்த:** தொலைபேசி உரையாடல் கூட இல்லையா?

**சுமந்திரன்:** ஒன்றிரண்டு முறை நான் பேசியிருக்கிறேன். அது ஒரு தொடர்பு என்று சொல்ல முடியாது . எனக்கு சில டயஸ்போறாக்களோடு சம்பந்தம் இருக்கிறது. ஜி.டி.எவ். – பி.டி.எவ். – சி.ரிசி. – ஏ.ரி.சி. நிறுவனங்களோடு எனக்குத் தொடர்பு இருக்கிறது . அப்படியானவர்கள் எம்மோடு இணைந்து வேலை செய்யும் நிறுவனங்கள்.

**சமுதித்த:** உருத்திரகுமாரன் உங்களோடு கடைசியாக பேசிய நாள் எப்போது என நினைவில் இருக்கிறதா?

**சுமந்திரன்:** நினைவில்லை. எனக்கு 2016 அல்லது 2017 இல் கலிபோர்னியாவில் இருக்கும் அவர்களது நாடாளுமன்றத்திற்கு வந்து பேசும்படி ஓர் அழைப்புக் கிடைத்தது. அதை நான் ஏற்றுக் கொள்ளவில்லை.

**சமுதித்த:** உருத்திரகுமாரன் என்பவர் நாட்டுக்கு வெளியில் இன்னொரு ஈழத்தை உருவாக்க முயற்சி செய்யும் ஒரு நபர். அவருடன் ஏன் நீங்கள் உறவு வைத்திருக்கிறீர்கள்?

**சுமந்திரன்:** அதுதான் சொன்னேனே எனக்கு உறவு என்று ஒன்றுமில்லையென்று. அவரது நாடாளுமன்றத்திற்குள் வந்து பேசச் சொல்லி அழைப்பு ஒன்றை விடுத்தார். நான் வர முடியாது என அதற்கு பதில் அளித்தேன். அவ்வளவுதான்

**சமுதித்த:** புலிகளின் டயஸ்போரா மூலம் வரும் பணம் முழுவதுமாக உங்கள் மூலமாகத்தானே நாட்டுக்குள் வருகிறது. நீங்கள்தானே அவர்களது முகவர் ?

**சுமந்திரன்:** இல்லை! சில உறவினர்கள் தங்களது குடும்பங்களுக்குப் பணம் அனுப்புகிறார்கள். அப்படியான பொருளாதாரம் ஒன்றுதான் வடக்கில் இருக்கிறது. அங்குள்ள பிள்ளைகளுக்கு தொழில் வாய்ப்புகள் இல்லை. வேறு ஏதாவது செய்யக் கூட அவர்களுக்கு வாய்ப்புகளும் இல்லை. தங்கள் சொந்தங்கள் அனுப்பும் பணத்தில்தான் அந்த மக்கள் வாழ்கிறார்கள். அப்படி வேறு எந்த சம்பந்தமும் அங்கு இல்லை.

**சமுதித்த:** நீங்கள் பிரிவினை வாதத்தை ஏற்றுக் கொள்ளும் நபரா? இல்லாவிட்டால் தனிநாடு ஒன்றை உருவாக்க விரும்பும் நபரா?

**சுமந்திரன்:** அப்படி நான் நினைத்ததில்லை.

**சமுதித்த:** நாங்கள் எல்லோரும் ஒன்றாக இருக்க வேண்டும் என்று நீங்கள் நினைக்கிறீர்களா?

**சுமந்திரன்:** ஒன்றாக இருக்க வேண்டும். அதே நேரத்தில் அனைத்து இனங்களுக்கும் உரிமையோடு வாழக் கூடிய தன்மை இருக்க வேண்டும். அரசியல் பலத்தை அனைவரும் பாவிக்கக் கூடியதாக இந்த அரசியல் இருக்க வேண்டும்.

**சமுதித்த:** அப்படியானால் தேசிய கூட்டமைப்பு ஏன் சமஷ்டி வேண்டும் என்று கேட்கிறது?

**சுமந்திரன்:** சமஷ்டி முறையைத்தான் நாங்கள் கேட்கிறோம். சமஷ்டி முறையால்தான் அனைத்து இனங்களுக்கும் ஆள உரிமை கிடைக்கும் எனும் உறுதி இருக்கிறது.

**சமுதித்த:** அதாவது இன்னொரு நாடு.

**சுமந்திரன்:** இல்லை! சமஷ்டி என்பது இன்னொரு நாடு என்பதல்ல.

**சமுதித்த:** சமஷ்டிஎன்பது இன்னொரு நாடு. சமஷ்டி என்றதும் நாடு பிரிந்தது என்றுதான் அர்த்தம்?

**சுமந்திரன்:** அமெரிக்காவில் இருப்பதும் சமஷ்டி முறை. ஆஸ்திரேலியாவில் இருப்பதும் சமஷ்டி முறை. கனடாவில் இருப்பதும் சமஷ்டி முறை. ஐரோப்பிய நாடுகளில் பலவற்றில் இருப்பதும் இந்த சமஷ்டி முறை. அவை எல்லாம் வேறு வேறு நாடுகள் என்று யாரும் சொல்வதில்லை. அவை அனைத்தும் பலமான நாடுகள். அப்படி இருப்பதால்தான் அந்த நாடுகள் பலமாக இருக்கின்றன.

**சமுதித்த:** நீங்கள் தேசியக்கொடியை ஏற்றுக்கொள்கிறீர்களா?

**சுமந்திரன்:** ஆம்! அது எங்கள் தேசியக்கொடி. அதனால் நாங்கள் ஏற்றுக் கொள்கிறோம்

**சமுதித்த:** தேசிய கீதத்தை.

**சுமந்திரன்:** தேசிய கீதத்தை ஏற்றுக்கொள்கிறேன். தேசியக் கொடியை நானே ஏற்றியிருக்கிறேன். யாழ்ப்பாணத்தில் நானும் சம்பந்தன் ஐயாவும் மட்டும்தான் அதைச் செய்கிறோம்.

**சமுதித்த:** அதைத்தான் சொல்ல வந்தேன். உங்கள் கட்சியை உங்களால் கட்டுப்படுத்த முடியவில்லை. மற்றவர்கள் அதைச் செய்கிறார்கள் இல்லை.

**சுமந்திரன்:** அதுகுறித்து ஒரு சரித்திர பின்னணியை நாம் பார்க்கவேண்டும். 1972 எமது அரசியல் சாசனத்தை வரையும்போது எங்களை வெளியில் போட்டுவிட்டுத்தான் அதை உருவாக்கினார்கள். தமிழர்களை இணைத்துக் கொள்ளாமல் தமிழர்களது கருத்துகளைக் கூடக் கேட்காமல் அன்றைய தேசிய ஆன்மாவிலிருந்து இருந்து எம்மை வெளியே தள்ளிவிட்டு அந்தக் கொடியை உருவாக்கினார்கள். அதனால்தான் 1976 களில் தனிநாடு ஒன்று வேண்டும் என்ற ஓர் எண்ணம் கோரிக்கையாக உருவானது. அதோடு வந்த கொடியை பலர் ஏற்றுக் கொள்ளவில்லை. அதை இன்னமும் பலர் ஏற்றுக் கொள்கிறார்கள் இல்லை. அன்று நாங்கள் ஏற்காததை மீண்டும் எப்படி நாங்கள் கைகளில் ஏந்துவது எனும் பிரச்சினை அவர்களிடம் இருக்கிறது. எனக்கு அந்த பிரச்சினை இல்லை.

**சமுதித்த:** நீங்கள் விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனின் ஆயுதப் போராட்டத்தை ஏற்றுக் கொள்கிறீர்களா?

**சுமந்திரன்:** இல்லை. நான் ஏற்றுக் கொள்ளவில்லை.

**சமுதித்த:** ஒரு போதும் ஏற்றுக் கொள்ளவில்லை

**சுமந்திரன்:** நான் இதை யாழ்ப்பாணத்திலும் சொல்லுகிறேன். ஏனைய பிரதேசங்களிலும் இதையே சொல்கிறேன். அதனால் எனக்கு எதிர்ப்புகள் இருக்கின்றன. அவர் எங்களுக்காகதானே போராடினார்கள், ஏன் ஏற்றுக் கொள்கிறீர்கள் இல்லை என்று என்னோடு முரண்படுகிறார்கள். அதற்கு காரணம் நான் ஆயுதப்போராட்டம் ஒன்றை ஒருபோதும் ஆதரிப்பவன் அல்லன் என்பதுதான்.

**சமுதித்த:** ஏன் மீண்டும் நாடாளுமன்றத்தைக் கூட்ட வேண்டும் என்று இந்த அளவுக்கு நீங்கள் முயற்சி செய்கிறீர்கள்?

**சுமந்திரன்:** எங்கள் நாடு ஜனநாயக ரீதியான ஒரு நாடாக இருந்தால் அதற்கு நாடாளுமன்றம் ஒன்று இருக்க வேண்டும். நாடாளுமன்றம் ஒன்று இல்லாத ஜனநாயக நாடொன்று உலகத்தில் எங்குமே இல்லை.

**சமுதித்த:** நாடாளுமன்றத்தை அரசியல் சட்டத்தின் பிரகாரம் மீண்டும் கூட்ட முடியாது தானே ?

**சுமந்திரன்:** முடியும்.அவசர நிலையொன்று ஏற்பட்டால் 70/7 இல் கலைக்கப்பட்ட நாடாளுமன்றத்தை மீண்டும் கூட்டலாம் என இருக்கிறது.

**சமுதித்த:** அவசரகாலச் சட்டத்தில் அரசாங்கம் அதை சரியாக செய்து கொண்டுதான் போகிறது. அதில் திருப்தியடையவில்லையா?

**சுமந்திரன்:** அரசு என்பது 3 பிரிவுகள் உள்ளன. இந்த முன்னால் இருக்கும் டிரைபோட் (கமரா ஸ்டான்ட்) போல நிர்வாகம் – நீதி மற்றும் நாடாளுமன்றம். அதில் ஒன்று விழுந்தாலும் நாடே விழுந்துவிடும். அதனால்தான் அரசமைப்பிலேயே சொல்லப்பட்டிருக்கிறது நாடாளுமன்றம் இல்லாது ஆகக் கூடியதாக மூன்று மாதம் மட்டுமே இருக்க முடியும். அப்படியான ஒரு கடும் சட்டம் உண்டு. அதற்குள் ஓர் அவசர நிலை உருவானால் உடனடியாக நாடாளுமன்றத்தைக் கூட்ட வேண்டும் எனவும் அங்கே குறிப்பிடப்பட்டு உள்ளது.

**சமுதித்த:** நாடாளுமன்றம் இல்லாமலேயே கொரோனாவை இந்த அரசு சரியாக கட்டுப்படுத்திக் கொண்டு செல்கிறதுதானே?

**சுமந்திரன்:** இல்லை.அதை செய்ய முடியாது. இப்போது புது சட்டங்களை உருவாக்க வேண்டும். கோவிட் குறித்து புதிய சட்டங்களை உருவாக்க வேண்டும். உலகத்தில் உள்ள அனைத்து நாடாளுமன்றங்களிலும் ஒன்று கூடி புதிய சட்டங்களை வரைந்திருக்கிறார்கள். எங்களிடம் இருக்கும் சட்டம் சி.டி.ஓ. என ஒரு சட்டம் உள்ளது. ஆயிரத்துத் தொளாயிரத்தில் அது உருவாக்கப்பட்ட மிகப் பழையது. 'கொரைன்டைன் அக்ட்' என்பது 100 ஆண்டுகளுக்கு முன் பழமையானது.

**சமுதித்த:** நீங்கள் சொல்லுவது ஏற்றுக்கொள்ள முடியாத ஒரு தர்க்கமாக இருக்கிறது

**சுமந்திரன்:** ஒன்று கொலராவுக்காக இயற்றப்பட்ட சட்டம். அடுத்தது சின்னம்மைகாக! அந்த சுபாவம் வேறு விதமானது. கோவிட் 19ன் சுபாவம் வேறுவிதமானது . அதனால்தான் பிரித்தானியா – இந்தியா – சிங்கப்பூர் ஆகிய நாடுகளில் மட்டுமில்லை ஏனைய பல நாடுகளிலும் கோவிட் 19 ஆக்ட் என்னும் ஒரு சட்டத்தை அவர்கள் கொண்டு வந்திருக்கிறார்கள். அப்படி இல்லாமல் நிர்வாகம் மட்டும் செய்யுமானால் அது நீதித் துறையின் அனுமதி இல்லாமல் செய்வதாகவே உள்ளது.

**சமுதித்த:** ஏன் நீங்கள் இந்த அவசரகாலச்சட்டம் (ஊரடங்குச் சட்டம்) சட்ட ரீதியானது இல்லை சட்ட ரீதியானது இல்லை என எல்லா இடத்திலும் சொல்லிச் சொல்லி திரிகிறீர்கள்?

**சுமந்திரன்:** அது சட்ட ரீதியாக இல்லைதான். வேறு என்ன? யார் சொல்கிறார்கள்?

**சமுதித்த:** நோய்த்தடுப்பு மற்றும் நிவாரணம் குறித்த சட்டத்தில் அது சட்ட ரீதியான தாக இருக்கிறது

**சுமந்திரன்:** நான் வழக்கறிஞர் என்ற நிலையில் அது இல்லை என்று நான் சொல்கிறேன் . இப்படி ஓர் ஊரடங்குச் சட்டத்தைப் பிரகடனப்படுத்த முடியாது என நீதிமன்ற வழக்குகளில் காட்டப்பட்டுள்ளது. அதெல்லாம் தவறா?

**சமுதித்த:** அப்படியானால் நீங்கள் ஏன் மனித உரிமை கமினுக்கு எழுதினீர்கள்?

**சுமந்திரன்:** மனித உரிமை கமினுக்கு அதிகாரம் இருக்கிறது அரசுக்கு ஆலோசனை சொல்வதற்கு. நான் ஊரடங்கு நிலை அவசியமானது எனச் சொல்லியுள்ளேன். ஊரடங்குச் சட்டம் இந்த நேரத்தில் நாட்டுக்கு தேவை. அதை முறையாகச் செயல்படுத்த வேண்டும். வெறுமனே ஜனாதிபதி ஊடகம் ஊரடங்குச் சட்டத்தை நடைமுறைப்படுத்துவதாக அறிவிக்க முடியாது . அது முறையாக வர்த்தமானியில் அறிவிக்கப்பட்டு பிரசுரிக்கப் படவேண்டும். சமூகத்துக்குத் தெரிய வேண்டும். எந்த நேரத்தில் இருந்து இந்த நேரம் வரை என்பது, யாரிடம் இருந்து அனுமதிப்பத்திரம் வாங்குவது என்பன குறித்து அறிவிக்கப்பட வேண்டும். அவை அத்தனையும் எமது சட்டத்தில் எழுதப்பட்டிருக்கின்றன.

**சமுதித்த:** நீங்கள் நாடாளுமன்றத்தை கூட்ட சொல்வதற்கு வேறு ஒரு காரணம்தான் இருக்கிறது. இது பொய்தானே. உங்களுக்குள் இருப்பது வேறு ஒரு காரணம் தானே?

**சுமந்திரன்:** ஜனநாயகம் என ஒன்று இந்த நாட்டில் இருப்பதாக இருந்தால் இந்த நேரத்தில் நாடாளுமன்றம் செயல்பட்டே ஆக வேண்டும்.

**சமுதித்த:** நிலையியற் கட்டளைகள முதலில் மீறி மீண்டும் தேர்தலை அழைக்கக் கூடிய ஒரு சந்தர்ப்பத்தை உருவாக்கத்தானே நாடாளுமன்றத்தை மீண்டும் கூட்ட முயற்சிக்கிறீர்கள்?

**சுமந்திரன்:** இல்லை! இதை இப்படித்தான் பார்க்க வேண்டும். ஜனாதிபதிக்குத் தேர்தலை முன்னதாக அழைப்பதற்கு அதிகாரம் இருக்கிறது . அப்படி இல்லாவிட்டால் செப்டம்பருக்கு பின்னர்தான் நாடாளுமன்ற தேர்தல் நடைபெற வேண்டும். அவருக்கு இருக்கும் அதிகாரத்தை வைத்து தேர்தலை முன்னதாக அழைத்துள்ளார். அதற்கு சில நிபந்தனைகள் இருக்கின்றன. நாலரை வருடங்களுக்குப் பிறகுதான் அதை செய்ய முடியும். ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அந்த நிபந்தனைகளை மீறினார் என்றுதான் உயர்நீதிமன்றம் அதை ரத்துச் செய்து, அது செல்லாது எனத் தீர்ப்பளித்தது. அதுபோல வேறு நிபந்தனைகளும் இருக்கின்றன. மூன்று மாதத்திற்குள் நாடாளுமன்றம் கூட்டப்பட்டே ஆக வேண்டும். அந்த நிபந்தனைகளை அவர் மீறினால், அவர் முன்னால் தேர்தலை நடத்த வேண்டும் என்று சொன்னதும் ரத்தாகிவிடும்.

**சமுதித்த:** உடைந்துபோன ஐக்கிய தேசியக் கட்சியை இணைக்க வைக்கவும் தேர்தலுக்கான வேறு ஒரு நாளை பெறுவதற்காகவும்தானே நாடாளுமன்றத்தைக் கூட்டச் சொல்கிறீர்கள்?

**சுமந்திரன்:** ஐக்கிய தேசியக் கட்சி தொடர்பாக நான் இதைச் செய்யவில்லை. நான் இன்னொன்றையும் சொல்கிறேன். இன்னும் 6 மாதங்கள் சென்றாலும் ஐக்கிய தேசியக்கட்சி ஒன்றாக இணையாது. அது எனக்கு நன்றாக தெரியும். அது நடக்கவே நடக்காது. இது ஒரு பொய்யான குற்றச்சாட்டு.

**சமுதித்த:** நீங்கள் ஓர் அரசியல் சதிகாரர்தானே?

**சுமந்திரன்:** (சிரிப்போடு) நான் அரசியலில் இருப்பது இந்த நாட்டின் தேசியப் பிரச்சனைக்கு எல்லோரும் ஏற்றுக் கொள்ளக்கூடிய விதத்திலான தீர்வு ஒன்றை உருவாக்குவதற்கான ஆவலில்தான்.

**சமுதித்த:** என்னை பொறுத்தமட்டில் நாட்டின் நன்மைக்கான எந்த ஒரு வழக்கிலும் நீங்கள் வாதாடியது இல்லை. அனைத்தும் நாட்டிற்குக் கெடுதல் விளைவிக்கும் அதே போல் சதிகார வழக்குகளில்தான் நீங்கள் வாதாடி இருக்கிறீர்கள். பார்த்தால் இவைகளின் பின்னால் இருப்பது சுமந்திரன்தான்.

**சுமந்திரன்:** 2018 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதி அவர்கள் செய்த செயலுக்காக எதிராக நான் வாதாடினேன். நீதிமன்றத்தில் இருந்த 7 நீதிபதிகளும் நீதி வழங்கினார்கள். அவர்களும் சதித் திட்டங்களில் ஈடுபட்டார்கள் என்றா சொல்லப் போகிறீர்கள்?

**சமுதித்த:** இறுதியாக உங்கள் இதயத்தை தட்டி ஒரு கேள்வியை நான் கேட்கப் போகிறேன். நேரடியான பதிலொன்று தேவை? சிங்கள மக்களை நீங்கள் வெறுக்கிறீர்களா?

**சுமந்திரன்:** இல்லை.ஒருபோதும் இல்லை. நான் ஐந்து வயதிலிருந்தே கொழும்பில்தான் வாழ்கிறேன். எனது நண்பர்கள் பலர் சிங்களவர்களாக இருக்கிறார்கள். சிங்கள மக்களோடு சேர்ந்து வாழ்வது மகிழ்வானது என்றே நினைக்கிறேன்.

**சமுதித்த:** தெற்கில் இப்படிப் பேசும் நீங்கள் வடக்கில் போய் இன்னொரு கதை பேசுகிறீர்கள்தானே?

**சுமந்திரன்:** நான் வடக்கிலும் இதைத்தான் பேசுகிறேன்.

**சமுதித்த:** அந்த வடக்கு மக்களை உணர்ச்சி வசப்படுத்தி....

**சுமந்திரன்:** நான் அப்படி ஒருபோதும் செய்ததில்லை. அப்படி நான் செய்வதில்லை என்று தான் ஒரு குழுவினர் எனக்கு எதிராக செயல்படுகிறார்கள்.

**சமுதித்த:** இந்த தேர்தலில் நீங்கள் வெற்றி பெறுவீர்களா?

**சுமந்திரன்:** நிச்சயமாக.

**சமுதித்த:** அந்த 58 ஆயிரமும் உங்களுக்குக் கிடைக்குமா?

**சுமந்திரன்:** அதைவிட இரண்டு மடங்கு என்னால் எடுக்க முடியும். ஒரு லட்சத்துக்கு மேல் எனக்கு வாக்குகள் கிடைக்கும்.

**சமுதித்த:** இது ஒரு சவாலா?

சுமந்திரன்: சவால்தான்.

**சுமந்திரன்:** அங்குள்ளவர்கள் சுமந்திரன் வந்தால் பார்த்துக் கொள்கிறோம் என்றுதான் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்.

**சுமந்திரன்:** அவர்கள் எனக்கு வாக்களிக்கத்தான் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்.

**சமுதித்த:** அவர்கள் பார்த்துக் கொண்டிருப்பது உங்களுக்கு வாக்களிக்க பார்த்துக்கொண்டு இல்லை.

**சமுதித்த:** மிகவும் நன்றி! இதுவரை தமிழ் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் அவர்களோடு பேட்டி கண்டோம். உங்களுக்கு நன்றி.

**சுமந்திரன்:** உங்களுக்கும் நன்றி.

# முதலமைச்சர்களுடன் பிரதமர் மோடி காணொலியில் நேற்று ஆலோசனை!

கட்டுப்பாடுகளை மேலும் தளர்த்துவது, பொருளாதா ரத்தை ஊக்குவிப்பது தொடர்பாக, அனைத்து மாநில முதலமைச்சர்களுடன் பிரதமர் மோடி ஆலோசனை நடத்தி வருகிறார்.

இந்தியா முழுவதும் 3ஆம் கட்ட ஊரடங்கு அமலில் உள்ளது. முதலிரண்டு கட்டங்களில் இல்லாத அளவுக்கு பல்வேறு தளர்வுகள் அளிக்கப்பட்டுள்ள இந்த 3ஆம் கட்ட ஊரடங்கு வரும் 17ஆம் தேதியுடன் முடிவடைகிறது.

இந்நிலையில், மாநிலங்களின் முதலமைச்சர்களுடன் பிரதமர் மோடி, 5ஆவது முறையாகக் காணொலிக் காட்சி மூலம் ஆலோசனை நடத்தி வருகிறார். நேற்றுப் பிற்பகல் 3 மணிக்கு தொடங்கிய இந்த ஆலோசனை யில், அனைத்து முதலமைச்சர்களும் பேச அனுமதிக்கப்படுகிறார்கள்.

கடந்த முறை, நேரப் பற்றாக்குறை காரணமாக கோரிக்கைகளையும் கருத்துகளையும் முதலமைச்சர்கள் எழுத்து வடிவில் சமர்ப்பித்தார்கள். இந்த முறை அனைவரும் நேரடியாக பேச அனுமதிக்கப்படுவதால் ஆலோசனைக் கூட்டம் அதிக நேரம் நடைபெற உள்ளது.

பிரதமருடன் உள்துறை அமைச்சர் அமித்ஷா உள்ளிட்ட அமைச்சர்களும் பங்கேற்றுள்ளனர். முதலமைச்சர்கள், மாநில தலைமைச் செயலகத்தில் இருந்தபடி காணொலிக் காட்சி மூலம் ஆலோசனையில் பங்கேற்றுள்ளனர்.



தமிழக முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமி, சென்னையில் தலைமைச் செயலகத்தில் இருந்தபடி ஆலோசனையில் பங்கேற்றுள்ளார். கொரோனாவைக் கட்டுப்படுத்துவது அதேசமயம் பொருளாதாரச் செயல்பாடுகளை அதிகரிப்பது இந்த ஆலோசனைக் கூட்டத்தின் முக்கிய அம்சம் என தகவல்கள் தெரிவிக்கின்றன.

பிரதமர் தனது தொடக்க உரையில் புலம்பெயர் தொழிலாளர்களின் பிரச்சனை பற்றிக் குறிப்பிட்டார். அவரவர் இருக்கும் இடத்திலேயே இருக்குமாறு வலியுறுத்தினாலும், சொந்த ஊர்களுக்கு செல்ல விரும்புவது மனித இயல்பு என மோடி கூறினார்.

## ஆண் நண்பருடன் மும்பையில் காரில் சுற்றித் திரிந்த இந்தி நடிகை கைது!

மும்பை,மே.12

மும்பையில் காரில் சுற்றித் திரிந்த இந்தி நடிகை பூனம் பாண்டே மற்றும் அவரது நண்பரை பொலிஸார் கைது செய்தனர்.



இந்தி நடிகை பூனம் பாண்டே சர்ச்சைகளுக்கு பெயர் போனவர். இவர், இந்தியா கிரிக்கெட் போட்டியில் உலகக் கிண்ணத்த வென்றால் நிர்வாணமாக ஓடுவேன் எனக் கூறி சர்ச்சையை ஏற்படுத்தினார்.

அமித் சக்சேனா இயக்கிய நா, எ ஜர்னி ஆஃப் கர்மா ஆகிய இந்தி படங்களில் நடித்துள்ள இவர், தெலுங்கு கன்னடத்திலும் நடித்துள்ளார்.

இந்நிலையில், தற்போது நாடு முழுவதும் கொரோனா தொற்றை கட்டுப்படுத்த ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டுள்ளது. இதனை மீறி அநாவசியமாக வெளியில் சுற்றுபவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

இந்நிலையில் பூனம் பாண்டே நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை தனது ஆண் நண்பரான ஷாம் அகமதுடன் மும்பை மெரைன் ட்ரைவ் சாலையில் காரில் சென்றுள்ளார். எந்தவித காரணமும் இல்லாமல் வெளியில் சுற்றித்திரிந்த இருவரையும் மெரைன் ட்ரைவ் பொலிஸார் கைது செய்தனர். பின்னர் பொலிஸார் அவர்களை எச்சரித்து விடுவித்தனர்.

அவர்கள் பாந்த்ராவிலிருந்து மரைன் டிரைவ் வரை பயணித்தனர் எனத் தெரிகிறது. அவரது கார் இன்னும் பொலிஸாரின் வசம் உள்ளது.

இவர்கள் மீது சட்டத்தை மதிக்காதது, ஊரடங்கினை மீறி நோய் பரப்பும் நோக்கத்துடன் வெளியே சுற்றித்திரிந்தது, பொறுப்பில்லாமல் நடந்துகொண்டது என பல்வேறு பிரிவுகளில் பொலிஸார் வழக்கு தொடர்ந்துள்ளனர் எனக் கூறப்படுகிறது.

## கொரோனா பரிசோதனை செய்வதற்கு 500 ரூபா செலவில் சோதனை கருவி!

இந்தியாவில் கொரோனா பரிசோதனைக்கு 500 ரூபாய் மட்டுமே செலவாகும் வகையிலான கருவியைத் தாங்கள் உருவாக்கியுள்ளனர் என மேற்கு வங்க மாநிலத்தைச் சேர்ந்த ஜி.சி.சி பயோடெக் இந்தியா என்ற தனியார் நிறுவனம் தெரிவித்துள்ளது.



இரண்டு மாத கால ஆராய்ச்சி மற்றும் மேம்படுத்தலுக்குப் பிறகு இந்த கிட்டை தயாரித்துள்ளதாக பர்கானாஸ் மாவட்டத்தைச் சேர்ந்த நிறுவனத்தின் நிர்வாக இயக்குனர் மஜும்தார் தெரிவித்துள்ளார்.

இதற்கான உதிரிபாகங்கள் அனைத்தும் தங்களின் தயாரிப்பு என்பதால், இந்த கிட்டை தயாரிக்க ஆகும் செலவு குறைவு என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதுவரை 1 கோடி சோதனை கருவிகளை உருவாக்கியுள்ளதாகவும் 40 லட்சம் இருப்பில் உள்ளதாகவும் மஜும்தார் கூறினார்.

## 12 மணி நேரம் கணவரின் சடலத்துடன் அமர்ந்திருந்த பார்வையற்ற மூதாட்டி!

### சென்னையில் இப்படி ஓர் அவலம்

சென்னையில் சாலையோரம் வசித்து வந்த ஆதரவற்ற முதியவர் உயிரிழந்துவிட, யாரும் அடக்கம் செய்ய முன் வராமல் பார்வையற்ற மூதாட்டி 12 மணி நேரமாக தனது கணவனின் சடலத்துடன் அமர்ந்திருந்த சம்பவம் நிகழ்ந்துள்ளது.

நடக்க முடியாத நிலையில் இருந்த தங் கப்பன் – பார்வையை இழந்த ஜெயா தம்பதி சென்னை மயிலாப்பூர் ரோசாரி சர்ச்சாலையில் சாலை ஓரமாக வசித்து வந்தனர்.

பத்து ஆண்டுகளுக்கும் மேலாக சாலையோரம் வசித்து வரும் அந்த தம்பதிக்கு, அப்பகுதி மக்கள் உணவு கொடுத்து ஆதரவு அளித்து வந்தனர். தன்னார்வலர் ஒருவர் அவர்கள் வசிப்பதற்கு தள்ளு வண்டி ஒன்றையும் வாங்கி கொடுத்திருந்தார்.

அந்த வண்டியைத் தங்களது வீடாகப் பயன்படுத்தி அந்தத் தம்பதி வாழ்ந்து வந்தனர். இந்த ஊரடங்கு நாள்களில் தன்னார்வலர்கள் மூலம் கிடைத்த உணவை உண்டு வாழ்ந்த வந்த நிலையில் முதியவர் தங்கப் பனுக்கு உடல் நலம் பாதிக்கப்பட்டது.

நேற்று முன்தினம் முதியவருக்கு உடல் நிலை மோசமானதால், அப்பகுதி வாழ் மக்கள் உதவியுடன் ராயப்பேட்டைக்கு சிகிச்சைக்கு அனுப்பி வைத்துள்ளனர். ஆனால் முதியவருக்கு சிகிச்சை அளிக்காமல் திருப்பி அனுப்பியுள்ளனர்.

கண் தெரியாத மூதாட்டி வேறு வழி இல்லாமல் உடல் நிலை சரியில்லாத நிலையில் முதியவரை வண்டியிலேயே படுக்க வைத்து கவனித்து வந்துள்ளார். இந்த நிலையில் அதிகாலை திடீரென உயிரிழந்துள்ளார்.

வெகு நேரம் பேச்சு, மூச்சு இல்லாமல் கிடந்த முதியவர் உயிரிழந்து விட்டதை அறிந்து கொண்ட மூதாட்டி செய்வதறியாது அருகில் அமர்ந்து அழுது கொண்டேயிருந்துள்ளார்.

இதை பார்த்த பொதுமக்கள் சிலர் காவல்துறை, மாநகராட்சி ஆகியோருக்கு தகவல் தெரிவித்தும் 12 மணி நேரமாக உடலை எடுக்க வராமல் இருந்துள்ளனர். அதே சாலையில் உள்ள காவல் நிலைத்திற்கு பல முறை தகவல் தெரிவித்தும் யாரும் வரவில்லை என்கின்றனர்.



கண் தெரியாத மூதாட்டி செய்வதறியாது கண்ணீருடன் உடல் அருகே இருந்த காட்சி பார்ப்பவர்களுக்கு சோகத்தை ஏற்படுத்தியது. கொரோனா அச்சம் காரணமாக அருகில் உள்ளவர்களாலும் உடலை எடுக்க முடியவில்லை. ஆனால் மாலை வாங்கி வந்து அவருடைய உடலுக்கு அஞ்சலி செலுத்தினர். தன்னார்வலர்களின் தொடர் வற்புறுத்தலுக்கு பிறகு மாலை 4 மணிக்கு பிறகு தான் அவரது உடலை காவல்துறையினர் அம்புலன்ஸ் மூலம் ராயப்பேட்டை மருத்துவமனைக்கு எடுத்து சென் றுள்ளனர்.

கொரோனா உள்ளதா என சோதனை செய்யவும் திட்டமிட்டுள்ளனர். பின்னர், பார்வையற்ற மூதாட்டியை ஆதரவற்றோர் முகாமிற்கு மாநகராட்சி ஊழியர்கள் அழைத்து சென்றனர்.

கொரோனா வைரஸ் அச்சத்தால் தனி மனித விலகல் அனைவரும் கடைப்பிடிக்க வேண்டிய சூழல் ஏற்பட்டுள்ளது. ஆனால் அத்தகைய தனி மனித விலகல் சில நேரத்தில் அவசர உதவிகளை கூட செய்ய முடியாத கையறு நிலையையும் ஏற்படுத்திவிடுகிறது என்பதற்கு இந்த சோக சம்பவமே சாட்சி.

## தமிழகத்தில் நேற்று 798 பேருக்கு; மொத்தம் 8,002 பேருக்குப் பாதிப்பு

சென்னை, மே12

தமிழகத்தில் நேற்று ஒரே நாளில் 798 பேருக்கு கொரோனா பாதிப்பு உறுதி செய்யப்பட்டுள்ளது, 6 பேர் உயிரிழந்துள்ளனர். மொத்த பாதிப்பு எண்ணிக்கை 8,002 ஆகவும், பலி எண்ணிக்கை 53 ஆகவும் உயர்ந்துள்ளது.

தமிழக சுகாதாரத்துறை வெளியிட்ட அறிக்கையில் கூறப்பட்டுள்ளவை வருமாறு: – தமிழகத்தில் நேற்றுப் புதிதாக 798 பேருக்கு கொரோனா தொற்று உறுதியாகியுள்ளது. இதில், 514 ஆண்கள், 284 பெண்கள் அடங்குவர். மொத்தப் பாதிப்பு எண்ணிக்கை 8,002 ஆக அதிகரித்துள்ளது. சென்னையை சேர்ந்த 4 பேர், கடலூரை சேர்ந்த ஒருவர் மற்றும் கன்னியாகுமரியை சேர்ந்த ஒருவர் என கடந்த 24 மணிநேரத்தில் 6 பேர் உயிரிழந்துள்ளனர். மொத்த பலி எண்ணிக்கை 53 ஆக உயர்ந்துள்ளது.

நேற்று மட்டும் 92 பேர் குணமடைந்து 'டிஸ்சார்ஜ்' ஆகியுள்ளனர். இதனால் மொத்தம் 'டிஸ்சார்ஜ்' ஆனவர்கள் எண்ணிக்கை 2,051 ஆக உள்ளது. தற்போது 5,895 பேர் சிகிச்சையில் உள்ளனர். இன்று ஒரே நாளில் 11,862 மாதிரிகள் சோதனை செய்யப்பட்டுள்ளன. இவ்வாறு அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

# வடகொரியத் தலைவரைச் சுற்றி அழகிய 3 சக்திவாய்ந்த பெண்கள்



நியூயோர்க்,மே 12

வடகொரியத் தலைவரைச் சுற்றி அழகிய 3 சக்தி வாய்ந்த பெண்கள் இருக்கின்றனர் எனத் தகவல் வெளியாகி உள்ளது.

வட கொரியத் தலைவர் கிம் ஜாங் உன் குறித்து உறுதிபடுத்தாத பல தகவல்கள் வெளியாகின. அமெரிக்கா, சீனா, தென் கொரியா மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகளில் இருந்து வெளியாகும் தகவல்கள் அனைத்தும் வெவ்வேறாக இருந்தன. இதய சிகிச்சை தோல்வியில் முடிந்ததால் கோமாவில் இருக்கிறார் என ஒரு தகவல் வெளியானது. மற்றொன்று ஏவுகணை சோதனையின் போது அவருக்கு பாதிப்பு ஏற்பட்டதாக வெளியாகியுள்ளது.

இன்னொன்று கடற்கரையில் நடக்க சென்ற கிம் ஜாங் மாரடைப்பால் குப்புறச் சரிந்தார் எனவும், அவரை மீட்டு மருத்துவ சிகிச்சை அளிக்கப்பட்டு வருவதாகவும் வெளியாகியது.

கிம் ஜாங் உன் உயிருடன் இருக்கிறார், ஆனால் நடக்கவோ எழுந்து நிற்கவோ முடியவில்லை என்றும் கூறப்பட்டது.

இருப்பினும் அண்டை நாடான தென் கொரியா, கிம் ஜாங் ஆரோக்கியத்துடனும் துடிப்புடனும் உள்ளார் என கூறியது.

அதன் படி வடகொரியா தலைவர் கிம் ஜாங் உன் 20 நாள்களுக்குப் பிறகு பொதுவெளியில் தோன்றி ஆச்சரியப்படுத்தினார். தலைநகர் பியோயாங்கில் இருக்கும் உரத்தொழிற்சாலை விழாவில் கலந்து கொண்டார்.

38 வயதாகும் வடகொரிய தலைவரின் உள்நிர்வாக வட்டத்தில் மூன்று வலிமையான மற்றும் அழகான பெண்கள் உள்ளனர்.

இந்த மூவரில் கிம்மின் சகோதரி கிம் யோ ஜாங். சமீபத்திய வாரங்களில், கிம்மின் தங்கை, நாட்டின் சக்தி வாய்ந்த அமைப்பு. மற்றும் வழிகாட்டல் துறையின் தலைவராகி ஊடகங்களின் கவனத்தை ஈர்த்து வருகிறார். கிம்மிற்கு அடுத்த வாரிசு கிம் யோ ஜாங் தான் என்றும் அவர்தான் வட கொரியாவின் அடுத்த தலைவராக முடியும் என்றும் தகவல்கள் கூறுகின்றன.

நவீன, புதிய ஆயுதங்கள் மீது அதிக மோகம் கொண்ட கிம் யோ, வடகொரியாவின் அடுத்த தலைவராகத் தம்மை தயார் படுத்தி வருகிறார் எனவும் கூறப்படுகிறது. பெண் என்பதால் வடகொரிய ஆளும் வர்க்கம், கிம் யோவை புறக்கணிக்காது என்றும், கிம் குடும்பத்தாரை அங்குள்ள மக்கள் கடவுளுக்கு நிகராகவே பார்க்கிறார்கள் என்றும் கூறப்பட்டது.

கம்ப்யூட்டர் அறிவியல் பட்டதாரியான கிம் யோ, சமீப காலமாக தமது சகோதரருக்கு உதவியாக அரசு அலு வல்களிலும் ஈடுபட்டு வருகிறார். தமது 9 ஆவது வயதில் இருந்தே சுவிட்சர்லாந்தில் கல்வி பயின்ற கிம் யோ, பல்கலைக்கழக படிப்பை வடகொரியா வுக்கு திரும்பிய பின்னர் முடித்தார்.

இரண்டாவ்து வட கொரியாவின் ஒரு பாப் நட்சத்திரம் மற்றும் கிம்மின் மனைவி ரி சோல் ஜூ. எந்தவிதமான வம்புகளையும் உருவாக்காமல் யாருடைய கவனத்தையும் ஈர்க்காமல் செல்வாக்குடன் வளர்ந்தவர். ரி - கிம் தம்பதியருக்கு இரண்டு அல்லது மூன்று குழந்தைகள் உள்ளனர். ரி சோல் - ஜூ ஒரு காலத்தில் பாடகராக இருந்தவர் ஆவார்.

முன்னாள் சிஐஏ ஆய்வாளர் ஜங் எச். பாக் எழுதிய புதிய புத்தகம் ஒன்றில் கிம் தன்னை வட கொரியாவின் ஜான் எவ் கென்னடி என்று கருதுகி றார் எனவும், அவரது மனைவியை ஒரு நாகரீகமான ஜாக்குலின் கென்னடியாகவே பார்க்கிறார் என்றும் கூறி உள்ளார்.

"கிம்மின் மனைவிக்கு ஓர் உண்மையான அரசியல் தலைவர் என்ற லட்சியங்கள் இருப்பதாக நான் நினைக்கவில்லை, ஆனால் அவருக்கு மேல்தட்டு மக்களிடமிருந்து மரியாதை உண்டு" - என்று பாதுகாப்பு புலனாய்வு அமைப்பின் முன்னாள் உறுப்பினரான வட கொரிய ஆய்வாளர் புரூஸ் பெக்டோல் நியூயார்க் போஸ்ட்டிடம் தெரிவித்து உள்ளார்.

கிம்மிற்கு ஏதாவது நடந்தால் அவரும் குழந்தைகளும் பாதுகாப்பாக இருப்பார்கள் என்று நான் நினைக்கிறேன்.

கிம்மின் மாமா கொல்லப்பட்டதைப் போல அவரை கொல்ல மாட்டார்கள். அவரை நாட்டை விட்டு வெளியேற்றக்கூடும் என்று அவர் கூறினார்.

ஆனால் மனைவி மற்றும் சகோதரியின் பாத்திரங்களை சிக்கலாக்கும் மூன்றாவது பெண் ஒருவர் இருக்கிறார். அவர்தான் ஹியோன் சாங் - வோல் (வயது 48). கிம்மின் எஜமானி என்று பலரால் நம்பப்படுபவர். வட கொரியாவின் ஸ்பைஸ் கேர்ள்ஸ் என்றும் அழைக்கப்படும் பெண் மோரன்பாங் பாண்டின் முன்னணி பாடகராக விளங்கியவர் ஹியோன். சுவாரஸ்யமாக, இந்த மாத தொடக்கத்தில் கிம் போலவே, அவரும் ஒரு கட்டத்தில் இறந்துவிட்டார் எனக் கூறப்பட்டது.

ஆனால் கிம் போலவே, அவரது மரணம் குறித்த செய்திகள் வதந்தியாக இருந்தது. அவர் இப்போது கிம்மின் மிக நெருங்கிய உதவியாளராக உள்ளார், மேலும் ஒரு காலத்தில் கிம் சகோதரியால் நடத்தப்பட்ட செயல் இயக்குநர் வேலையை ஏற்றுக்கொண்டு உள்ளார்.

சில அறிக்கைகள் ஹியோன் அவரது தோழி மட்டுமே அல்லது அவரது மறைந்த தந்தை கிம் ஜாங் இல்லின் கடைசி காதலராகவும் இருக்கலாம் என்று கூறுகிறது.

ஹியோனுடனான கிம்ஸ் காதல் விவகாரம் அவரது தந்தையால் நிறுத்தப்பட்டதாக சில ஊடக அறிக்கைகள் கூறியுள்ளன, ஆனால் 2011 ஆம் ஆண்டில் கிம் ஜாங் இல் இறந்த பிறகு இந்த ஜோடி மீண்டும் ஒருவருக்கொருவர் காதல் செய்யத் தொடங்கின.

ஹியோன் மிகவும் சக்திவாய்ந்த பெண் என்று இப்போது அமெரிக்காவில் வசிக்கும் வட கொரியாவில் பிறந்த ஜேசன் லீ கூறினார். அவர் நிச்சயமாக மனைவியை விட சக்திவாய்ந்தவர், ஆனால் அவர் சகோதரியைப் போல சக்திவாய்ந்தவராக இருக்க முடியாது என்று லீ கூறினார்.

## ஈரான் கடற்படை பயிற்சியின்போது

# சொந்த போர் கப்பல் மீதே ஏவுகணை தாக்கியதில் 19 வீரர்கள் உயிரிழப்பு!



ஈரானில் கடற்படை பயிற்சியின் போது அந்நாட்டு போர் கப்பலின் மீது தவறுதலாக ஏவுகணை தாக்கியதில் 19 பேர் உயிரிழந்தனர் எனத் தகவல் வெளியாகி உள்ளது.

ஓமன் வளைகுடாவில் உள்ள பந்தர் - இ ஜாஸ்க் துறைமுகத்துக்கு அருகே ஈரான் கடற்படையினர் பயிற்சியில் ஈடுபட்டிந்தபோது, மௌட்ஜ் வகுப்பு போர் கப்பலான ஜம்ரன், எதிர்பாராத விதமாக கொனாரக் போர் கப்பலை ஏவுகணை மூலம் தாக்கியதாக ஈரான் நாட்டு செய்தி நிறுவனங்கள் தெரிவித்துள்ளன.

இதில் 19 வீரர்கள் உயிரிழந்தமையுடன், 15 பேர் படுகாயமடைந்த நிலையில், ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளனர். விசாரணை நடந்து வருவதாக அதிகாரிகள் கூறியுள்ளனர்.

# தென்கொரியா மற்றும் சீனாவில் மீண்டும் பலருக்கு கொரோனா!

## ஊரடங்கைத் தளர்த்தியதன் விளைவு



தென்கொரியா, சீனா போன்ற நாடுகளில், ஊரடங்கு தளர்த்தப்பட்டதை தொடர்ந்து, மீண்டும் பலருக்கு, புதிதாக தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதை தொடர்ந்து, அந்நாட்டு அரசாங்கங்கள் தளர்வுகளை, நீக்க தொடங்கியுள்ளன.

ஆரம்ப காலங்களில், கொரோனா பெருந்தொற்றால், பெரும் பாதிப்பை அடைந்த ஆசிய நாடுகளை கண்டு, ஐரோப்பிய நாடுகள் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் எடுக்காததன் விளைவால், தற்போது லட்சக்கணக்கான மக்கள் கொரோனாவால் பலியாகும் நிலை ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில், ஐரோப்பிய நாடுகளில், கொரோனாவால் பாதிக்கப்படுவோரின் எண்ணிக்கை தொடர்ந்து அதிகரித்து வரும் வேளையில், அவசரப்பட்டு ஊரடங்கை தளர்த்தினால், பெரும் ஆபத்தை சந்திக்க நேரிடும் எனப் பிரிட்டன் விஞ்ஞானிகள் எச்சரித்துள்ளனர்.

# கொரோனாவின் இந்த நெருக்கடி இன்னும் 2ஆண்டுகள் நீடிக்குமாம்!

## அமெரிக்க ஆராய்ச்சியாளர்கள் தெரிவிப்பு

கொரோனா வைரஸ் தொற்றின் தற்போதைய நிலைமை இன்னும் 2 ஆண்டுகள் வரை நீடிக்கலாம் என அமெரிக்க ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

கொரோனா வைரஸ் தொற்றுநோய் அடுத்த 18 - 24 மாதங்களுக்கு நீடிக்கும் என்று அமெரிக்க ஆராய்ச்சியாளர்களின் புதிய குழு ஆய்வு கணித்துள்ளது. அடுத்த இரண்டு ஆண்டுகளில் இந்த நோயை அவ்வப்போது மீண்டும் எழலாம் என்பது குறித்து உலகெங்கிலும் உள்ள அரசாங்கங்களுக்கு பரிந்துரைகள் உள்ளன.

அமெரிக்காவின் மினசோட்டா பல்கலைக்கழகத்தில் தொற்று நோய் ஆராய்ச்சி மற்றும் கொள்கை மையம் தொற்றுநோய்களின் கடந்தகால வடிவங்களை அடிப்படையாகக் கொண்ட ஆய்வு ஒன்றை நடத்தியது.

இந்த ஆய்வில் டாக்டர் கிறிஸ்டின் ஏ. மூர் (சிட்ராப்பின் மருத்துவ இயக்குநர்), டாக்டர் மார்க் லிப்சிட்சஸ் (தொற்று நோய் இயக்கவியல் மையத்தின் இயக்குனர், ஹார்வர்ட் டி.எச். சான் ஸ்கூல் ஓவ் பப்ளிக் ஹெல்த்), ஜான் எம். பாரி (பேராசிரியர் துலேன் யுனிவர்சிட்டி ஸ்கூல் ஓவ் பப்ளிக் ஹெல்த்) மற்றும் மைக்கேல் டி. ஓஸ்டர்ஹோம் (சிட்ராப் இயக்குனர்) ஆகியோர் பங்குபெற்றனர்

1700 இன் தொடக்கத்தில் இருந்து எட்டு உலகளாவிய காய்ச்சல் தொற்றுநோய்கள் பதிவாகியுள்ளன. 1900 முதல் நான்கு - 1918 - 19, 1957, 1968 மற்றும் 2009 - 10 ஆகிய ஆண்டுகளில்.

சார்ஸ் மற்றும் மெர்ஸ் போன்ற சமீபத்திய கொரோனா வைரஸ்களின் தொற்றுநோய் சார்ஸ் கோவி - 2 புதிய கொரோனா வைரஸ்லிருந்து கணிசமாக வேறுபட்டது என்று ஆராய்ச்சியாளர்கள் வாதிடுகின்றனர்.

ஆய்வின் படி, இந்த நோய்க்கிருமிகள் இந்த தொற்று நோயால் என்ன எதிர்பார்க்கலாம் என்று கணிக்க பயனுள்ள மாதிரிகளை வழங்கவில்லை. இன்ஃப்ளுயன்ஸா வைரஸ்கள் மற்றும் கோவிட் - 19 வைரஸ் இடையே வேறுபாடுகள் இருந்தபோதிலும், தொற்றுநோய்களுக்கு இடையே நிறைய ஒற்றுமைகள் இருப்பதாக விஞ்ஞானிகள் கண்டறிந்து உள்ளனர்.

இரண்டும் முக்கியமாக சுவாச பாதை வழியாக பரவுகின்றன. அறிகுறி, பரவுதல் இரு வைரஸ்களிலும் ஒரே மாதிரியாக உண்டு. மற்றும் 200கோடி மக்களை பாதிக்கும். மேலும் உலகம் முழுவதும் வேகமாக நகரும் திறன் கொண்டவை. - என்று ஆராய்ச்சியாளர்கள் கண்டறிந்து உள்ளனர்.

உலகளாவிய மக்கள் முன்பே நோய் எதிர்ப்பு சக்தியைக் கொண்டிருக்கவில்லை, இதன் விளைவாக உலகளாவிய பாதிப்பு ஏற்படுகிறது என்று அவர்கள் ஆய்வாளர்கள் கூறி உள்ளனர். எவ்வாறாயினும், கடந்தகால இன்ஃப்ளுயன்ஸா தொற்றுநோய்களிலிருந்து ஒருவர் கற்றுக் கொள்ள முடியும் என்று விஞ்ஞானிகள் நம்புகின்றனர்,

புதிய கொரோனா வைரஸின் அடைகாக்கும் காலம் இன்ஃப்ளுயன்ஸாவை விட அதிகமாக உள்ளது. கிடைக்கக்கூடிய தகவல்கள் அறிகுறியற்ற பின்னர் இன்ஃப்ளுயன்ஸாவை விட அதிகமாக உள்ளது என்று கூறுகிறது.

ஆராய்ச்சியாளர்களின் கூற்றுப்படி, கொரோனாவின் அடிப்படை இனப்பெருக்க எண்ணிக்கையும் இன்ஃப்ளுயன்ஸா தொற்று காய்ச்சலை விட அதிகமாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது என விஞ்ஞானிகள் கூறி உள்ளனர்.

# தமிழர்களைத் தேர்தலில் ஏமாற்றவே கூட்டமைப்பு மஹிந்தவை சந்தித்தது

## சாடுகின்றார் சிவசக்தி ஆனந்தன்



> அடுத்து வரவிருக்கும் பொதுத்தேர்தலில் தமிழ் மக்கள் மத்தியில் எந்த முகத்துடன், எவ்வாறான வாக்குறுதிகளுடன் செல்வதென்ற இக்கட்டான நிலைக்குள் இருக்கிறது கூட்டமைப்பு. ஐ.நா மனித உரிமை பேரவை, புதிய அரசமைப்பு, காணாமலாக்கப்பட்டவர்கள், அரசியல் கைதிகள் உள்ளிட்ட அனைத்து விடயங்களிலும் கையறு நிலையிலேயே கூட்டமைப்பு உள்ளது.

பொதுத்தேர்தலில் மஹிந்த வாக்குறுதி அளித்ததாக தமிழ் மக்கள் மத்தியில் பொய்ப்பரப்புரை செய்து வாக்குகளை அறுவடையாக்கி தமது அரசியல் இருப்புக்களை தக்கவைப்பதற்காகவே பிரதமர் மஹிந்தவின் அழைப்பைக் கூட்டமைப்பு ஏற்றதோடு தனிப்பட்ட சந்திப்பிலும் ஈடுபட்டது என்று தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் பொதுச் செயலாளர் சிவசக்தி ஆனந்தன் தெரிவித்துள்ளார்.

தனியார் செய்தி நிறுவனம் ஒன்றிற்கு வழங்கிய விசேட செவ்வியிலே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அதன் முழு விவரம் வருமாறு:-

**கேள்வி:-** தமிழர் தாயகத்தில் கொரோனா தொற்று பராமரிப்பு எவ்வாறுள்ளது?

**பதில்:-** தமிழர் தாயகத்தினைப் பொறுத்தவரையில் கொரோனா தொற்றாளர்களின் எண்ணிக்கை மிகக்குறைவாக காணப்படுகின்றது. குறிப்பாக யாழ்ப்பாணத்தில் மதபோகருடன் தொடர்புபட்டவர்களுக்கு தொற்று கண்டறியப்பட்டுள்ளது.

ஆனால் வெளிமாவட்டங்களிலிருந்து கொரோனா தொற்றுக்குள்ளானவர்களை தமிழர் தாயகத்தில் தனிமைப்படுத்தல் முகாம்களை அமைத்து தங்க வைத்துள்ளனர். ஆரம்பத்தில் படையினரின் முகாம்களிற்குள் மட்டுமே தனிமைப்படுத்தப்பட்டிருந்தவர்கள் தற்போது பாடசாலைகள் மற்றும் பொதுக்கட்டடங்களில் தங்கவைப்படுகின்றார்கள். இது மிகவும் ஆபத்தானதொன்றாகும்.

அத்துடன் தென்னிலங்கையில் வெளிநாட்டிலிருந்து வருபவர்களை அம்பாந்தோட்டையில் விமான நிலையத்தில் தரையிறக்கி அங்கேயே தனிமைப்படுத்த முடியும். அதனைவிடவும் அந்த மாவட்டத்தில் பொதுநலவாய கூட்டத்தொடருக்காக கட்டப்பட்ட பாரிய அரங்குகள் காணப்படுகின்றன. மேலும் அவசர சிகிச்சைக்காக கொழும்பிற்கும் சொற்ப நேரத்தில் செல்வதற்கு நெடுஞ்சாலை வசதிகளும் காணப்படுகின்றன.

அவ்வாறான நிலைமைகள் இருக்கையில் வெளிநாட்டிலிருந்து வருபவர்களையும், உள்ளாட்டில் தொற்றுச் சந்தேகத்துக்குள்ளானவர்களையும் தனிமைப்படுத்த தமிழர் தாயகத்தை மையப்படுத்தும் இவ்வாறான நடவடிக்கையின் பின்னணியில் திட்டமிட்ட செயற்பாடொன்று உள்ளதா என்ற சந்தேகங்களும் எமக்கு வலுத்துள்ளது.

இதனைவிடவும் வடக்கில் மாத்திரம் சுமார் ஐந்து இலட்சம் படையினர் நிறுத்தப்பட்டுள்ளார்கள். தற்போது முப்படைகளைச் சேர்ந்த 351பேர் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில் படைகளின் முகாம்களில் மக்கள் தனிமைப்படுத்தப்படுவதும், வடக்கில் பாதுகாப்புக் கடமைகள், மற்றும் நலத்திட்ட உதவிகள் என்ற பெயரில் படையினர் செயற்படுவதானது பாரிய அச்சத்தையும் ஆபத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

இவற்றைவிடவும் வைரஸ் தொற்றை கண்டறியும் பி.சி.ஆர் பரிசோதனைகளுக்கான மருத்துவ பரிசோதனை உபகரணங்களுக்கான பற்றாக்குறைகள் நீடிப்பதாகவு சுகாதார துறையினர் சுட்டிக்காட்டியுள்ளனர்.

**கேள்வி:-** கொரோனா நெருக்கடியால் ஏற்பட்டுள்ள அசாதாரண சூழலில் தமிழ் மக்களுக்கான வாழ்வாதர உதவித்திட்டங்கள் எவ்வாறான நிலையில் உள்ளது.

**பதில்:-** போர் நிறைவுக்கு வந்து தசாப்த்தினை கடந்துள்ள போதும் தமிழர் தாயகத்தில் வாழ்வாதார தேவைகள் மிகவும் உயர்ந்த மட்டத்திலேயே இருந்தது. போரால் பாதிக்கப்பட்ட குடும்பங்கள் பல வறுமையின் கோரப்பிடிக்குள்ளேயே இருந்தன. எனினும் கடந்த பத்து ஆண்டுகளில் இந்த நிலைமைகளில் மாற்றங்கள் ஏற்படவில்லை. கடந்த காலத்தில் ஆட்சியிலிருந்து போர் வெற்றியைக் கூறி மார்பு தட்டிய மஹிந்த அரசோ அல்லது கூட்டமைப்புடன் தேனிலவு கொண்டாடிய மைத்திரி – ரணில் கூட்டரசோ இந்த நிலைமை மாற்றுவதற்கான எந்த அடிப்படைகளையும் முன்னெடுப்பதற்கு தயாராக இருந்திருக்கவில்லை.

ஆகவே ஏற்கனவே வாழ்வாதார நெருக்கடிக்குள் இருந்து வந்த தமிழ் சமூகம் தற்போதைய தொடர் ஊரடங்கால் பெரும் நெருக்கடிக்குள் உள்ளாகியுள்ளது. இந்த நிலைமையிலும் ஆட்சியில் உள்ளவர்கள் தமிழ்மக்களை மாற்றான் தாய் மனப்பான்மையுடன் தான் பார்கின்றார்கள். குறிப்பாக பெண் தலைமைத்தவ குடும்பங்கள், மாற்றுத்திறனாளிகள், அன்றாட தொழில்களில் ஈடுபட்டு வந்தவர்களென அனைவரும் வறுமையின் பிடியால் பட்டினியின் விளிம்பிற்கு தள்ளப்பட்டுள்ள சோகமான நிலைமை தான் காணப்படுகின்றது.

இந்த நிலையில் எம்மாலான உலர் உணவு, சமைத்த உணவு விநியோகங்களை மேற்கொண்டு வருகின்றோம். இதனைவிடவும் புலம்பெயர் உறவுகளின் கொடைகளில் உதவிகளை முறையாக மேற்கொண்டு வருகின்றோம். ஆனால் யானைப்பசிக்கு சோளப்பொரிபோன்று பாதிக்கப்பட்ட மக்களின் எண்ணிக்கையுடன் ஒப்பிடுகையில் மக்கள் நல உதவிகள் போதாதிருக்கின்றது.

**கேள்வி:-** பொதுத்தேர்தலுக்கான கருத்தாடல்கள் இடம்பெற்று வருகின்ற நிலையில் பிரதமரின் அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்கள் கூட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பங்கேற்றிருக்கின்ற போதும் தாங்கள் பங்கேற்றிருக்கவில்லையே?

**பதில்:-** முதலாவதாக பொதுத்தேர்தலொன்று நடைபெறுவதாக இருந்தால் அதற்கான சுமூகமான புறச்சூழல்கள் ஏற்படுத்தப்பட வேண்டியது அவசியமாகின்றது. குறிப்பாக பொதுமக்கள் தமது ஜனநாயகக் கடமையை அச்சமின்றி நிறைவேற்றுவதற்கான உறுதிப்பாடான சூழலொன்று ஏற்பட வேண்டும். அவ்வாறான நிலைமையொன்று ஏற்படுகின்ற நிலையில் பொதுத்தேர்தலை நடத்தவதற்கு நாம் ஆட்சேபம் தெரிவிக்கப்போவதில்லை. அதுவே தேர்தல் தொடர்பான நிலைப்பாடாக இருக்கின்றது.

அடுத்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பிரதமர் மஹிந்தவுடனான சந்திப்பில் பங்கேற்றமைக்கான உண்மையான காரணம் அவர்களது மனச்சாட்சிக்கே வெளிச்சம்.

ஆனால் மஹிந்தவின் அரசியல் நாடாகத்திற்குள் சிக்குண்டுகொள்வதற்கும் எவ்விதமான தீர்மானங்களும் எடுக்கப்படாவொரு காட்சிக் கூட்டத்தில் பங்கேற்பதற்கு நாம் தயாராக இல்லை.

மேலும்,நாட்டில்அரங்கேறிய இனப்படுகொலைக்கு பொறுப்புக்கூறவே மாட்டோம் என்றும், காணமல் போனவர்கள் காணாமாலாக்கப்பட்டவர்களாக இருப்பர் என்றும் அரசியல் கைதிகள் என்று யாருமில்லை என்றும் ஒட்டுமொத்தமாக இனப்பிரச்சினையே இந்த நாட்டில் இல்லை பொருளாதார பிரச்சினையே இருக்கின்றது என்று கூறும் ராஜபக்ஷவினரிடத்தில் சென்றுகைகுலுக்குவதால்என்னநடக்கப்போகின்றது.

அவ்வாறிருக்க, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பிரதமருடான அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்கள் கூட்டம், மற்றும் தனிப்பட்ட பிறிதொரு சந்திப்பு ஆகியவற்றில் கலந்து கொண்டது. இதில் பொது மக்களுக்கு நன்மை பயக்கும் வகையில் ஆகக்குறைந்தது ஒரு தீர்மானத்தனையோ அல்லது இணக்கப்பாட்டினையோ எடுத்தது என்றோ அடுத்து வரும் நாட்களில் அது நடைமுறையாகுமென்றோ கூற முடியுமா?

அவ்வாறு கூறுவதற்கு எதுவும் இல்லை. நாடாளுமன்ற ஜனநாயகத்தினை காப்பாற்றப்போகின்றோம் என்ற பெயரில் மீண்டும் நாடாளுமன்றத்தினை கூட்டுமாறு கோரிவிட்டு கூட்டமைப்பு திரும்பியிருக்கின்றது. அவ்வாறு கோரப்பட்டபோது ஒரு வார்த்தை கூட மஹிந்த தரப்பில் பதில் வழங்கப்படவில்லை. அரசியலமைப்பு தொடர்பில் பேசவிளைந்தபோது புதிய நாடாளமன்றில் பார்க்கலாம் என்று கூறி சம்பந்தரை வாயடைக்கச் செய்துவிட்டது மஹிந்த தரப்பு.

கடந்த காலத்தில் மைத்திரி, ரணில் பொருட்டாக எடுக்காத நிலைமையே கடந்த மூன்று நான்கு மாதங்களாக தொடர்ந்திருந்தது. இந்த நிலைமைளை மாற்றி புதிய உறவொன்றை ஏற்படுத்தவே அனைத்து எதிர்க்கட்சிகளும் பிரதமரின் கூட்டத்தினை நிராகரித்தபோதும் கூட்டமைப்பினர் பங்கேற்றிருகின்றனர்.

கூட்டமைப்பு தமிழ் மக்கள் பற்றி பிரச்சினைகளை பேசாது விட்டாலும் ஆகக்குறைந்தது ஊரடங்கு சட்டம் சட்டரீதியல்ல என்று வாதிட்டுவரும் சுமந்திரன் இந்தக் கூட்டத்தில் பங்கேற்றிருந்தார். அந்த தருணத்தில் பிரதமரிடத்தில் அதுபற்றி நேரடியாகவே கேள்வி எழுப்பியிருக்கலாம் அல்லவா? அதனைக் கூட செய்யவில்லையே.

அடுத்து வரவிருக்கும் பொதுத்தேர்தலில் தமிழ் மக்கள் மத்தியில் எந்த முகத்துடன், எவ்வாறான வாக்குறுதிகளுடன் செல்வதென்ற இக்கட்டான நிலைக்குள் இருக்கிறது கூட்டமைப்பு. ஐ.நா மனித உரிமை பேரவை, புதிய அரசமைப்பு, காணாமலாக்கப்பட்டவர்கள், அரசியல் கைதிகள் உள்ளிட்ட அனைத்து விடயத்ங்களிலும் கையறு நிலையிலேயே கூட்டமைப்பு உள்ளது. பொதுமக்களின் அன்றாட வாழ்வாதாரத்துடன் தொடர்புடைய வேலைவாய்ப்பு, நலத்திட்டங்கள் உள்ளிட்ட எதிலுமே முன்னேற்றங்கள் இல்லை. ஆகவே தான் அனைத்து நாடாளுமன்ற கூட்டத்திற்குச் சென்ற கூட்டமைப்பு காதும்காதும் வைத்தாற்போல் மஹிந்தவிடத்தில் நேரஒதுக்கீட்டை கோரி பிறிதொரு சந்திப்பையும் நடத்தியுள்ளது. இதனைப் பயன்படுத்தி அடுத்த பொதுத் தேர்தலில் தமது இருப்புக்களை நிலைப்படுத்துவதற்கான வாக்கு அறுவடையை செய்யவே கூட்டமைப்பு விளையவுள்ளது என்பதே உண்மை நிலையாகும்.

**கேள்வி:-** வெசாக் தினத்தில் பொதுமன்னிப்பில் விடுவிக்கப்படவுள்ள கைதிகளில் தமிழ் அரசியல் கைதிகள் எவரும் உள்ளடக்கப்படவில்லையே?

**பதில்:-** இதுவொரு துர்ப்பாக்கிய நிலைமையாகும். முதலாவதாக தற்போது ஏற்பட்டுள்ள கொரோனா பரவலால் சிறைச்சாலைகளில் காணப்படுகின்ற நெருக்கடியான நிலைமைகளை கருத்திற்கொண்டு அனைத்து தழிழ் அரசியல் கைதிகளையும் நிபந்தனைக்குட்பட்ட பிணை வழங்கப்பட்ட தற்காலிமாக அவர்களின் அன்புக்குரியவர்களுடன் இருப்பதற்கு ஏற்பாடுகளை மேற்கொள்ளுமாறு கோரியிருந்தேன். ஆனால் இந்த அரசாங்கம் அதனைப் பொருட்டாக கொள்ளவில்லை.

தமிழ் அரசியல் கைதிகளில் பலர் தண்டனைக் காலத்தினை விடவும் அதிகளவு காலம் சிறைவசம் அனுபவித்து விட்டார்கள். அவர்களின் விடுதலையை நாம் தொடர்ச்சியாக வலியுறுத்தி வருகின்றோம். மிருசுவில் படுகொலையாளிக்கு பொதுமன்னிப்பளிக்குமளவிற்கு மனநிலைகொண்டிருக்கும் ஆட்சியாளர் இந்த விடயத்தினை கருத்தில் கொள்வதாக இல்லை.

மேலும் அரசியல் கைதிகள் தமது விடுதலையை வலியுறுத்தி போராடுகின்ற ஒவ்வொரு சந்தர்ப்பங்களிலும்,அல்லது அரசுடன் பேரம்பேசுவதற்கான வாய்ப்புக்கள் கிடைக்கும் ஒவ்வொரு சந்தர்ப்பங்களிலும் எமது நிலைப்பாடுகளை புறந்தள்ளி கூட்டமைப்பே விடயங்களை கையாண்டு ஈற்றில் அவற்றை முடக்கியது.

ஆகவே அரசின் நிலைப்பாட்டுக்கு அப்பால் இந்த விடயத்தினை வலுவிழக்கச் செய்ததில் கூட்டமைப்பிற்கே பெரும்பங்குண்டு. சிறையில் உள்ள உறவுகளின் விடியலை தடுத்தது மட்டுமன்றி அவர்களுக்கான சட்ட உதவிகளை வழங்குவதற்கு கூட தயாரில்லாத நிலையில் தான் கூட்டமைப்பு உள்ளது என்பது துரதிடவசமானதாகும்.எனினும் தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை விடயத்தில் நாம் கட்சி பேதமின்றி முழுமையான ஒத்துழைப்புக்களையும் அழுத்தங்களை தொடர்ச்சியாக வழங்குவோம் – என்றார்.

# தென்மராட்சியின் சிகரம்
# மட்டுவிலின் இமயத்துக்கு
# மணிவிழா வாழ்த்துக்கள்!



## சரவணை கிருஷ்ணன்

SLPS III
Special Trained Primary Education

**அதிபர், யா/மட்டுவில்**
**வடக்கு அ.த.க. பாடசாலை**

ஈழமணித்திருநாட்டில் வடபால்
யாழ்ப்பாண மாநகரினிலே
கல்வி அறிவு பெற்ற
மாந்தர் பலரை பெற்றெடுத்த
மட்டுவில் ஊரினிலே
சரவணை தம்பதியினர் பெற்றெடுத்த கிருஷ்ணன்
எனும் அறிவு நிறை செல்வர்
இளமை முதலே பெற்றோரின்
கண்ணுள் கருமணியாய்
வளர்ந்து கல்வி கேள்விகளில்
வளர்ச்சி கண்டதோடு
பேச்சு முதல் கவிதை எனும்
எழுத்தாளுமையிலும் தனக்கென தனியான
பெயர் பதித்தார்

ஆசுகளையும் ஆசிரியராய் பணி செய்து
மாண்பு மிக்க மாணாக்கர் பலரை
இவ் மண்ணுலகில் ஆளுமை மிக்க மனிதர்களாய்
துலங்கச்செய்தார்
கல்வி புலமையில் இன்னும் உயர்ந்து
அதிபராய் ஏற்றம் கண்டார்

காணும் இளசுகளை
அறிவுரை பல சொல்லி
அறிவில் துலங்கச்செய்தார்
மணி விழா காணும் வரை
ஓயாது ஒளி கொடுக்கும் சூரியனாய்
பணிகள் பல செய்து
எமக்கெல்லாம் வழிகாட்டியாய்
துலங்கும் இவர்
இன்று போல் என்றும்
உடல் நலம் இறை அருளோடு
ஆயிரம் பிறைகாண வாழ
வாழ்த்துகிறோம் வாழி

### சேவை விவரம்

**28.11.1989 - 02.02.1993 வரை**
ஆசிரியர் ,
யாழ். சந்திரபுர ஸ்கந்தவரோதய
மகா வித்தியாலயம்

**03.02.1993 - 31.12.1994 வரை**
கோப்பாய் ஆசிரியர் பயிற்சி கலாசாலை,
யாழ்ப்பாணம்

**01.01.1995 - 08.10.2008**
ஆசிரியர்,
யா/ சந்திரபுர ஸ்கந்தவரோதய
மகா வித்தியாலயம்

**09.10.2008 - 11.05.2020**
அதிபர்,
யா/ மட்டுவில் வடக்கு அ.த.க. பாடசாலை

வாழ்த்துவோர் :
**என்றும் அன்புடன் மட்டுவில் உறவுகள்**

# ஆயுதப் போராட்டத்தை எவரும் கேலி செய்து கொச்சைப்படுத்தவோ விமர்சிக்கவோ கூடாது

## சீறுகின்றரார் தமிழரசு ஊடகச் செயலாளர் அரியநேத்திரன்

*மட்டக்களப்பு, மே12*

*விடுதலைப் போராட்டத்தில் ஆயுதப் போராட்டம் என்பது தவிர்க்க முயாத ஒன்றாக இருக்கின்றது. ஆகவே அந்த ஆயுதப் போராட்டத்தை எவராவது கேலி செய்வதோ கொச்சைப்படுத்துவதோ, விமர்சிப்பதோ எந்த வகையிலும் ஏற்றுக்கொள்ள முடியாதது என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் இலங்கை தமிழரசுக்கட்சியின் ஊடக செயலாளருமான பா.அரியநேத்திரன் தெரிவித்தார்.*



தமிழ்த் தேசிய கூட்டமைப்பு உருவாக்கத்தின்போது தலைவர் சம்பந்தர் கட்சியில் இல்லையெனவும் பின்னரே அவர் தமிழ் தேசிய கூட்டமைப்பில் இணைந்துகொண்டார் எனவும் அதன் காரணமாக தமிழ் தேசிய கூட்டமைப்பு உருவாக்கம் தொடர்பில் சம்பந்தன் ஐயாவுக்கு எதுவும் தெரியாமல் இருக்கலாம் எனவும் இதன்போது தெரிவித்தார்.

2009ஆம் ஆண்டு மேமாதம் 19ஆம் திகதிக்கு முற்பட்ட காலப்பகுதியில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்துடன் இணைந்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பானது பல அரசியல் பணிகளை செய்திருக்கின்றது. இந்த வரலாற்றை மாற்ற முடியாது எனவும் அவர் தெரிவித்தார்.

நேற்று மாலை மட்டு.ஊடக அமையத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனை தெரிவித்தார்.இதன்போது தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர் –

எமது கட்சியின் ஊடகப் பேச்சாளரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமானஎம்.ஏ.சுமந்திரன் தொடர்பாக சிங்கள ஊடகமொன்றில் வெளிவந்த கருத்து தொடர்பாக பல்வேறுபட்ட விமர்சனங்கள் வெளியிடப்பட்டுவருகின்றமையைக் காண முடிகின்றது. பல தமிழ் ஊடகங்களிலும் சமூக வலைத்தளங்களிலும் பல்வேறு கருத்துக்களை தொடர்ச்சியாகப் பார்க்கின்றோம். தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆயுதப் போராட்டம் தொடர்பாகவும் தலைவர் தொடர்பாகவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தொடர்பாகவும் பல கருத்துக்களை அவர் கூறியிருக்கின்றார். விடுதலைப்போராட்டத்திற்கு எதிராக அவர் அவ்வாறான கருத்துக்களை கூறியிருப்பாராயின் அதை ஏற்றுக்கொள்ள முடியாது.

உண்மையில் ஓர் ஆயுதப் போராட்டத்தின் காரணமாகத்தான் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு 2001ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது. இன்றுவரை அது ஜனநாயக ரீதியாக அரசியல் பணியை செய்துகொண்டிருக்கின்றது. அந்த ஆயுதப் போராட்டத்தின் நிமித்தமாகவே புலம்பெயர்ந்து வாழ்கின்ற பத்து லட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் இன்று அங்கிருந்து ஏதோவொரு வகையிலே தமிழ் மக்களுக்கு பல உதவிகளை செய்துகொண்டிருக்கின்றார்கள்.

விடுதலைப் போராட்டத்தில் ஆயுதப் போராட்டம் என்பது தவிர்க்க முயாத ஒன்றாக இருக்கின்றது.ஆகவே அந்த ஆயுதப் போராட்டத்தை எவராவது கேலி செய்வதோ, கொச்சைப்படுத்துவதோ, விமர்சிப்பதோ எந்த வகையிலும் ஏற்றுக்கொள்ள முடியாது.

சுமந்திரன் அவர்கள் ஆயுதப் போராட்டத்தை தான் ஆதரிக்கவில்லை என்றும் அதனை ஏற்றுக்கொள்ளவில்லை என்றும் கருத்தை கூறியிருக்கின்றார்.

2001ஆம் ஆண்டு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உருவாக்கப்பட்டது தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் இருந்தபோதாகும். அது உருவாக்கப்பட்டதன் பின்னர் தொடர்ச்சியாக நான்கு தடவைகள் நாடாளுமன்ற தேர்தலில் போட்டியிட்டிருக்கின்றோம். அதில் குறிப்பாக 2009ஆம் ஆண்டு மேமாதம் 19ஆம் திகதிக்கு முற்பட்ட காலப்பகுதியில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்துடன் இணைந்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பானது பல அரசியல் பணிகளை செய்திருக்கின்றது. இந்த வரலாற்றை மாற்ற முடியாது.

விடுதலைப் புலிகள் மௌனித்ததன் பிற்பட்ட காலப்பகுதியில் அவர்களுடன் எங்களுக்கு சம்பந்தமில்லை என்று கூறுவதையோ மாற்றுக் கருத்துகளை கூறுவதையோ ஏற்றுக்கொள்ள முடியாது. சுமந்திரன் அவர்களின் தனிப்பட்ட கருத்தாகவே நான் அதனை பார்க்கின்றேன். சிலர் அதனை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கருத்தாகவே சித்திரிக்கின்றனர்.

ஆயுதப் போராட்டத்தை தான் ஒருபோதும் ஏற்றுக் கொள்பவனில்லை என்றும் ஸ்ரீலங்காவின் தேசியக் கொடியை,தேசிய கீதத்தை தான் ஏற்றுக்கொள்பவன் என்றும் அவர் கூறியிருக்கின்றார். அவர் ஏற்றுக்கொள்வதென்பது அவரின் தனிப்பட்ட கருத்தாகும். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் அதனை ஏற்றுக்கொண்டிருக்கின்றனர் என சமூக வலைத்தளங்களில் கருத்துகள் வெளியிடப்படுவதை ஏற்றுக்கொள்ள முடியாது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களை பொறுத்தமட்டில் இலங்கை சுதந்திரமடைந்த காலந்தொட்டு தேசியக் கொடியை அங்கீகரிக்கவில்லை. சில விடயங்கள் காரணமாக 1972ஆம் ஆண்டுக்கான அரசமைப்பின்படி தமிழ் மக்களை அரசாங்கம் முற்றாக புறக்கணித்ததன் நிமித்தமாக இவ்வாறான நிலைப்பாடு தொடர்ச்சியாக இருந்துகொண்டிருக்கின்றது.

இன்று சர்வதேச ரீதியாக தமிழ் மக்களின் பிரச்சினை சென்றிருக்கின்றதென்றால் அதற்குக் காரணம் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் ஆயுதப் போராட்டமாகும் என்பதை புரிந்துகொள்ள வேண்டும்.

வடக்கு கிழக்கில் ஏறத்தாழ ஐம்பதாயிரம் மாவீரர்களை நாங்கள் இழந்திருக்கின்றோம். அவர்களின் பெற்றோர்கள் தற்போது வாழ்ந்துகொண்டிருக்கின்றனர். அவர்களின் தியாகங்களை நாங்கள் கொச்சைப்படுத்த முடியாது. தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் ஆயுதப் போராட்டம் காரணமாகவே தமிழர்கள் இன்று தமிழர்களாக வாழ்ந்துகொண்டிருக்கின்ற சூழ்நிலை இருந்துகொண்டிருக்கின்றது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கு ஆயுதப் போராட்டத்தில் சம்பந்தமில்லை அல்லது அதுதொடர்பில் அக்கறையில்லை என்று கூறுபவர்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இருந்துகொண்டு விடுதலைப் புலிகளை அல்லது போராளிகளை அல்லது மாவீரர்களை உதாசீனம் செய்யும் விதமாக கருத்துகள் கூறுவதை நாங்கள் ஏற்றுக்கொள்ள முடியாது.

தமிழீழ விடுதலைப்புலிகளின்போராட்டம் தமிழ் தேசிய கூட்டமைப்பின் வகிபாகம் என்பது ஒன்றுடன் ஒன்று பின்னிப்பிணைந்ததே. அதிலிருந்தே நாங்கள் இந்த நிலைக்கு வந்திருக்கின்றோம்.

இன்று பல கட்சிகள் தமிழ் தேசிய கூட்டமைப்பினை விமர்சிக்கும் செயற்பாட்டை மட்டுமே முன்னெடுக்கின்றன. அவர்கள் தமது கட்சி கொள்கைகள் பற்றிக் கூறுவதில்லை.இவர்களுக்கு தமிழ் தேசிய கூட்டமைப்புப் பற்றியோ,தமிழ் தேசிய கூட்டமைப்பினர் பற்றியோ கருத்து தெரிவிப்பதற்கு எந்த அருகதையும் இல்லை. தமிழ் தேசிய கூட்டமைப்புக்கு வாக்களித்தவர்கள், தமிழ் தேசிய கொள் கையினையுடையவர்களுக்கு அது தொடர்பில் கருத்து கூறுவதற்கான சுதந்திரம் இருக்கின்றது.

தமிழீழ விடுதலைப் புலிகளின்போராட்டத்தினைநானாகஇருந்தாலும் சம்பந்தன் ஐயாவாக இருந்தாலும் யாராகயிருந்தாலும் அந்த போராட்டத்தினை கொச்சைப்படுத்தவோ, கேவலப்படுத்தவோ அல்லது அந்த ஆயுதப் போராட்டம் இல்லாமல் தமிழ் தேசிய கூட்டமைப்பு வளர்ந்துவிட்டது,அல்லது தமிழ் தேசியத்தினை நாங்கள் சர்வதேசம் வரையில் கொண்டுசென்றிருக்கின்றோம் என்று கூறுவதற்கு எவருக்கும் அருகதையில்லை.

எப்போதும் தமிழீழ விடுதலைப் புலிகளின் போராட்டம். தியாகம், மாவீரர்களின் தியாகம் காரணமாகவே சர்வதேசத்தில் தமிழ் மக்களின் பிரச்சினை கூர்மைபெற்றுள்ளது. சர்வதேசத்தில் இருந்து இன்று எமது பிரச்சினை பார்க்கப்படுகின்றது என்றால் அது தமிழ் தேசிய கூட்டமைப்பின் வகிபாகம் மட்டுமல்ல, புலம்பெயர் மக்களின் வகிபாகமும் உள்ளது. தமிழீழ விடுதலைப்புலிகள் இல்லாமல்இருந்திருந்தால் மக்கள் இவ்வாறு புலம்பெயர்ந்திருக்கமுடியாது. ஆயுதபோராட்டம் ஒன்று இடம்பெறாமலிருந்திருந்தால் இவ்வாறு வெளியில் சென்றிருக்க முடியாது.

சுமந்திரன் முதலில் தான் கூறிய கருத்தினை முதலில் தெளிவுபடுத்தவேண்டும்.அவ்வாறு அவர் கூறியிருந்தால் அவர் தன் கருத்தினை மீளப்பெறுவது சிறந்ததாகும்.

தமிழ் தேசிய கூட்டமைப்பின் உருவாக்கத்திற்கான ஆரம்ப நடவடிக்கையெடுக்கப்பட்டது.

2000ஆம் ஆண்டு கிழக்கிலங்கை செய்தியாளர் சங்கம் எடுத்துக்கொண்ட முயற்சி காரணமாக 2001ஆம் ஆண்டு தமிழ் தேசிய கூட்டமைப்பு உருவாக்கப்பட்டது.

தமிழிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தின் அனுசரணையில்லாமல், அங்கீகாரமில்லாமல் தமிழ் தேசிய கூட்டமைப்பு உருவாக்கப்படவில்லை.தமிழ்தேசிய கூட்டமைப்பின்ஆரம்ப நடவடிக்கையில் ஈடுபட்டவர்களின் ஒருவன் என்ற அடிப்படையில் எனக்கு அதன் விடயங்கள் தெரியும்.

சம்பந்தன் ஐயாவினை பொறுத்தவரையில் தமிழ் தேசிய கூட்டமைப்பு உருவாக்கப்படும் காலப்பகுதியில் அவர் அதில் பங்குபற்றவில்லை.தமிழ் தேசிய கூட்டமைப்பு உருவாக்கப்பட்டதன் பின்னர் 2001ஆம் ஆண்டு நாடாளுமன்ற தேர்தலின்போதே இணைந்துகொண்டார்.தமிழ் தேசிய கூட்டமைப்பின் உருவாக்கம் என்பது சம்பந்தர் ஐயாவுக்கு தெரியாமல் இருக்கலாம்.தமிழ் தேசிய கூட்டமைப்பு கிழக்கிலங்கை செய்தியாளர் சங்கத்தின் அனுசரணையுடன் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் அங்கீகாரத்துடன்தான் உருவாக்கப்பட்டது. அதில் எந்த மாற்றுக்கருத்தும் இல்லை என்றார். – என்றார்.

# நாய் இழுத்துச் சென்ற சிசு பிரசவித்த தாயார் கைது!

மட்டக்களப்பு, மே. 12

மட்டக்களப்பு – மண்டூர் ஆணைக்கட்டு பிரதேசத்தில், பிரசவித்த பெண் சிசுவை தாய் கைவிட்டுச் சென்றுள்ளார். சிசுவை, நாய் இழுத்துச் சென்ற நிலையில் சிசு சடலமாக மீட்கப்பட்டுள்ளது. இதையடுத்து, சிசுவைப் பிரசவித்த தாய் நேற்று முன்தினம்மாலைகைதுசெய்யப்பட்டுள்ளாரென வெல்லாவெளிப்பொலிஸார்தெரிவித்தனர்.


வெல்லாவெளி பிரதேசத்தைச் சேர்ந்த 4பிள்ளைகளின்தாயாரான39வயதுடைய பெண்ணே கைது செய்யப்பட்டுள்ளார்.



# தினம் ஒரு தலைப்பு சித்திரப்போட்டி

மழலைகளின் பொழுதை பயனுள்ளதாக மாற்றுவோம்


படம் 1


படம் 2



இந்த இரு சித்திரங்களும் இறுதிப் போட்டிக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளன. இன்றைய சித்திரப் போட்டிக்கான தலைப்பு- 'புள்ளிமான்'

**படம் 1**
இ. கார்த்திகன் - தரம் 8
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி

**படம் 2**
டேவிட்ராஜ் பிலெஸ்ஷின் - தரம் 5
யா/ வட இந்து ஆரம்பப் பாடசாலை

நேற்றைய தினம் அதிகளவான மாணவர்கள் 'கிடுகு வேலி' எனும் தலைப்பில் சித்திரங்களை வரைந்து அனுப்பியிருந்தனர்.

தரமான அனைத்தையும் பிரசுரிக்க முடியா ததால் மேலதிகமாகத் தெரிவு செய்யப்பட்ட சித்திரங்களை வரைந்தவர்களது பெயர் விவரம் மாத்திரம் பிரசுரிக்கப்படுகிறது.

த. கபிலாஷ் - தரம் 8
தி/ கோணேஸ்வரா இந்துக் கல்லூரி

பா. தனுபன் - தரம் 6
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி

டி. ஹரிஸ்மன் - தரம் 8
யா/ புனித பத்திரிசியர் கல்லூரி

உ. ரோஷித் - தரம் 4
யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை

உ. ஆராதனா - தரம் 2
யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை

டி. அபிலாஷ் - தரம் 10
யா/ புனித பத்திரிசியர் கல்லூரி

ச. வைஸ்வினி - தரம் 8
தி/ உவர்மலை விவேகானந்தாக் கல்லூரி

அ. க. ரிஷாளன் - தரம் 11
யா/ பரியோவான் கல்லூரி

திலகராஜ் திலக்சயன் - தரம் 5
உடுவில் மகளிர் கல்லூரி

சி. சிவகலை - தரம் 4
யா/ இடைக்குறிச்சி சிறி சுப்பிரமணிய வித்தியாலயம்

எஸ். சிவசாகித்தியன் - தரம் 7
யா/ மகாஜனாக் கல்லூரி

மயூரன் தேனுகா - தரம் 10
யா/ வேலணை மத்திய கல்லூரி

அன்றியா தக்ஷரா காண்டீபன் - தரம் 2
சுண்டுக்குளி மகளிர் கல்லூரி

தி. கோவெழிலன் - தரம் 4
யா/ புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயம்

தவேந்திரன் ஆஹரன் - தரம் 2
யா/ நெல்லியடி மெதடிஸ்த தமிழ்க் கலவன் பாடசாலை

த. யதுனேஷ் - தரம் 4
தி/ கோணேஸ்வரா இந்துக் கல்லூரி

காலைக்கதிர் Kalaikathir

## புள்ளி மான்

16 வயதிற்கு உட்பட்ட மாணவர்களுக்கு



தினம் ஒரு தலைப்பு

## சித்திரப்போட்டி

**இன்று (12/05/2020) தலைப்பு**
**புள்ளி மான்**

ஒவ்வொரு நாளுக்குரிய தலைப்பும் முதல் நாள் மாலை யில் தரப்படும். அத்தலைப்புக்குப் பொருத்தமான சித்திரத்தை அன்று மாலை 6 மணிக்கு முன்னதாக எமது மின்னஞ்சலுக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

* சித்திரத்தினை A4 அளவுள்ள வெள்ளைத்தாளில் வரைய வேண்டும்.
* சித்திரங்கள் வர்ணத்தில் அல்லது கருப்பு வெள்ளையாக அமையலாம்.
* தெரிவுசெய்யப்படும் சித்திரங்கள் காலைக்கதிரின் முகப் புத்தகத்தில் பகிரப்படும்.
* தினமும் தெரிவுசெய்யப்படும் தரமான ஒரு சித்திரம் காலைக்கதிர் பத்திரிகையில் பிரசுரமாகும்.
* போட்டி முடிவில் பரிசுக்குரிய சித்திரங்களுக்கு பணப் பரிசில்கள் வழங்கப்படும்.

சித்திரங்கள் தெளிவான முறையில் படம்பிடிக்கப்பட்டு வரைந்த மாணவரின் பெயர், பாடசாலை, தரம், பெற்றோரின் தொலைபேசி இலக்கம் ஆகிய விபரங்களுடன் kalaikkathiredu@gmail.com எனும் மின்னஞ்சல் முக வரிக்கு அனுப்பிவைக்கவும்.

**மேலதிக விபரங்களுக்கு: 076 443 8623**

# சிப்பாய் மீது தாக்குதல்: முன்னாள் போராளி சரண்

யாழ்ப்பாணம், மே. 12

வடமராட்சி கிழக்கு நாகர்கோவில் பகுதி கடந்த ஜனவரி மாதம் 15ஆம் திகதி தைப்பொங்கல் நாளன்று சிப்பாய் ஒருவர் தாக்கப்பட்டு வந்த சம்பவத்துடன் இராணுவத்தினரால் தேடப்பட்டு வந்த முன்னாள் போராளி பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தில் நேற்று சரணடைந்தார்.

சட்டத்தரணி சந்திரசேகரனின் ஏற்பாட்டில் முன்னாள் போராளி, பொலிஸ் நிலையத்தில் சரணடைந்தார்.

எனது கட்சிக்காரரை இராணுவத்தினம் தேடிவந்தனர். எனினும் சிப்பாயைத் தாக்கிய சம்பவத்துடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் நீதிமன்றில் தாக்கல் செய்த அறிக்கையில் அவரது பெயர் இல்லை. அதனால் பொலிஸாரால் தேடப்படும் நபராக அவர் உள்ளரா என்பதை பொலிஸ் தலைமையகத்தில் உறுதிப்படுத்துமாறு நீதிமன்றம் கட்டளையிட்டிருந்தது.

இந்த நிலையில் அவரது வீட்டுக்கு கடந்த வெள்ளிக்கிழமை இரவு சென்றிருந்த சிலர், எனது கட்சிக்காரரைத் தேடியுள்ளனர். அதனால் அவரை நாளை நீதிமன்றில் முற்படுத்துவதற்காக பொலிஸ் நிலையத்தில் இன்று சரணடைந்தார் என்று சட்டத்தரணி தெரிவித்தார்.

**பின்னணி**

கடந்த தைப்பொங்கல் தினத்தன்று மாலை, வீதியைக் கடக்க முற்பட்ட சிறுமி ஒருவரை மோதி விபத்தை ஏற்படுத்தும் வகையில் மோட்டார் சைக்கிளை வேகமாக செலுத்தி வந்தார் என இராணுவத்தினர் அந்த நபரைக் கண்டித்த போது அந்த நபரின் உறவினர்கள் கூடியதால் துணிவடைந்த அவர் இராணுவச் சிப்பாயைத் தாக்கினார். சிப்பாயைத் தாக்கிவிட்டு அனைவரும் அந்த இடத்திலிருந்து தப்பித்தனர்.

அதனை அடுத்து மறுநாள் அப்பகுதியை சுற்றி வளைத்த இராணுவத்தினர் , இராணுவ சிப்பாயை தாக்கியவரை கைது செய்ய தேடுதல் நடாத்தி இருந்தனர். அச்சம்பவத்தின் பிரதான சந்தேக நபரான முன்னாள் கடற்புலி போராளியான ஐங்கரன் என்பவரை தேடியே இராணுவத்தினர் சுற்றி வளைப்பில் ஈடுபட்டனர்.

இராணுவத்தினர் சுமார் இரண்டு வார தேடுதலின் பின்னர் இராணுவ சிப்பாயை தாக்கியவர்கள் என 8 பேரை கைது செய்து பருத்தித்துறை பொலிசாரிடம் ஒப்படைத்தனர்.

பொலிஸாரினால் சந்தேக நபர்கள் பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டனர். தொடர்ந்து வந்த வாரங்களில் வழக்கு விசாரணைகள் நடாத்தப்பட்டு தற்போது அவர்கள் பிணையில் விடுவிக்கப்பட்டு வழக்கு விசாரணைகள் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

## சுகாதார அமைச்சின் செயலாளராக பொறுப்பேற்றார் சஞ்சீவ முனசிங்க

கொழும்பு, மே. 12

சுகாதார அமைச்சின் புதிய செயலாளராக மேஜர் ஜெனரல் சஞ்சீவ முனசிங்க நேற்று சுகாதார அமைச்சர் பவித்திரா வன்னியாராச்சி முன்னிலையில் தனது கடமைகளைப் பொறுப்பேற்றுக் கொண்டார்.

கடமைகளைப் பொறுப்பேற்கும் நிகழ்வில் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் அனில் ஜாசிங்க, அமைச்சின் முன்னாள் செயலாளர் பத்ராணி ஜயவர்தன மற்றும் மேலதிக செயலாளர்கள் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டனர்.

சுகாதார அமைச்சின் செயலாளராக இதுவரை கடமையாற்றிய பத்ராணி ஜயவர்தன வர்த்தக அமைச்சிற்கு மாற்றப்பட்டுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

**வீட்டுத்தோட்ட விதைகள் விற்பனைக்கு**

வீட்டுத்தோட்டத்திற்கு தேவையான விதைகள் விற்பனைக்கு உண்டு.
வெண்டி, பயிற்றை, கத்தரி, கீரை, தக்காளி, பாகல், மிளகாய், சோளம், பூசணி, முள்ளங்கி, பீற்றூட், புடோல், குறிமிளகாய், சிறகவரை.
(வீடுகளிற்கும் விநியோகிக்கப்படும்.)
தொடர்புகளுக்கு: 077 411 4422

**வேலைவாய்ப்பு – இரவுக் காவலாளி**

யாழ். நகரப்பகுதியில் இயங்கும் நிறுவனம் ஒன்றிற்கு இரவுக்காவலாளி ஒருவர் தேவை. முழுநேரமாக தங்கிநின்று வேலைசெய்தால் உணவு, தங்குமிடம் வழங்கப்படும். சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.
தொடர்புகளுக்கு: 077 307 8799

**காலைக்கதிர்** Kalaikkathir மாலைப்பதிப்பு

விளம்பரம் (8cm x 5cm) பிரசுரிக்க!
கருப்பு வெள்ளை – ரூபாய் 500/-
முழு வர்ணம் – ரூபாய் 1000/-
தொடர்புகளுக்கு: 076 443 8622
kalaikkathiradvt@gmail.com

**தோட்டக்காணி தேவை**

மரக்கறித் தோட்டம் செய்யக்கூடிய வளமான செம்மண் உள்ள காணி குத்தகைக்குத் தேவை. இரசாயண உரங்கள், கிருமிநாசினிகள் ஆகியவை பாவிக்காத காணி விரும்பத்தக்கது. உரிய முறையில் பராமரித்து குத்தகை முடிவில் நல்ல நிலையில் திருப்பிக் கொடுக்கப்படும்.
தொடர்புகளுக்கு: 078 284 5000

**புழுக்கொழயல் விற்பனைக்கு.**

சுத்தமான சுகாதாரமான முறையில் பொதியிடப்பட்ட புழுக்கொழயல் 1/2kg, 1/4kg பைக்கற்றுகளில் விற்பனைக்கு உண்டு. தேவைப்படின் வீடுகளுக்கும் விநியோகம் செய்யப்படும். (மேலதிக கட்டணத்துடன்)
தொடர்புகளுக்கு: 076 100 5277

**யாழ்ப்பாணம்**
சுன்னாகம் 021 224 2022
பருத்தித்துறை 021 492 3201
கச்சேரி 021 222 6699
ஆவரங்கால் 021 222 6688
தெல்லிப்பளை 021 224 3737
சாவகச்சேரி 021 227 0700
நெல்லியடி 021 300 6550
கிளிநொச்சி 021 228 5505
விசுவமடு 021 320 1515
பூநகரி 021 320 1818
முழங்காவில் 021 300 6544
வவுனியா 024 222 7777
மன்னார் 023 225 1656

# கிருபா லேணர்ஸ்

கிருபா லேணர்ஸ் KIRUBAA LEARNERS

தொலைபேசி இல.
021 222 4353
021 492 3200
071 454 6960













# மெல்ல சகஜ நிலைக்குத் திரும்பும் கொழும்பு...

நேற்றைய நகரக் காட்சிகள் .......

## வெளிநாடுகளுக்கான துரித தபால்கள், பொதிகள் சேவை




20 வருட கால அசைக்க முடியாத நம்பிக்கையை வென்ற நாம்

அருள்ஸ் (பிறைவேற்) லிமிட்டெட்

இல.10 மாநகர சபை புதிய கட்டத் தொகுதி, கஸ்தூரியார் வீதி யாழ்ப்பாணம்.

021 222 3536

நெல்லியடியில் – இல. 01, பெற்றோல் செற்லேன், நெல்லியடி, 076 443 1576

சாவகச்சேரி – இல.01 NDB வங்கிக் கட்டடம், தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி. 076 443 1576

SRI MURUGAN
COMMUNICATION & AGENCY POST OFFICE

உலகெங்குமிருந்து

உறவுகளுக்கு தபால்கள் பொதிகள் சேவை உடனுக்குடன் அனுப்ப

WESTERN UNION WU
மூலமாக அனுப்பப்படும் பணத்தை பாதுகாப்பாக எம்மிடம் பெற்று பயணப் பையினை பரிசாக வெல்லுங்கள்.

உறவுகளிடமிருந்து அனுப்பிய பணத்தை ஒரு சில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக் கொள்ள இவையனைத்தையும் ஒரே கூரையின் கீழ்; அதிவிரைவு பாதுகாப்பு நம்பகத் தன்மை.

No.303, K.K.S Road, Jaffna SriLanka Tel : 021 222 2670 / 5392
Email : SriMurugan09@gmail.com Fax:021 222 3214
Srimurugan303@gmail.com

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள பசுமை ஊடக இல்லம் (தனி) வரை. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 12.05.2020 இல் வெளியிடப்பெற்றது.